Registered as a Newspaper

# உதயன்

பக்கங்கள் 12

விலை ரூ. 50

சுடர் : 38
கதிர் : 139

வெள்ளிக்கிழமை 14 ஏப்ரல் 2023

சித்திரை 01 ஆம் நாள் – வள்ளுவர் ஆண்டு 2054




அடுத்த 15 நாள்களுக்கு

## வடமாகாணத்தில் வெப்பப் பேரிடர்!

மே மாதம் தண்ணீர் பற்றாக்குறை?

**யாழ்ப்பாணம், ஏப்ரல் 14**

**வடக்கு மாகாணத்தில் அடுத்த 15 நாள்களுக்கு வெப்பநிலை உயர்வடையும் என்றும் சில இடங்களில் சுமார் 40 பாகை செல்சியஸ் வரையிலான வெப்பநிலைகூடப் பதிவாகும் என்றும் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகப் புவியியல் துறை சிரேஷ்ட விரிவுரையாளர் நாகமுத்து பிரதீபராஜா தெரிவித்துள்ளார்.** »11

## நிமோனியாவால் சிறுவன் சாவு!

உடையார்கட்டில் சோகம்


முல்லைத்தீவு, ஏப். 14
நிமோனியாக் காய்ச்சலால் பாதிக்கப்பட்ட சிறுவன் சிகிச்சை பயனின்றி நேற்று உயிரிழந்தார். முல்லைத்தீவு - »11




## பாலியல் தொழிலாளிகளாக இலங்கைப் பெண்கள் ஏலம்

விசாரணைகளை ஆரம்பித்தது ஐ.நா.

கொழும்பு, ஏப். 14
ஓமானில் இலங்கைப் பெண்கள் பாலியல் தொழிலாளர்களாக ஏலத்தில் விடப்பட்ட விவகாரம் தொடர்பில் ஐக்கிய நாடுகள் சபை விசாரணைகளை ஆரம்பித்துள்ளது.
அடிமைத்தனத்தின் தற்போதைய வடிவங்கள் தொடர்பிலான ஐக்கிய நாடுகள் சபையின் விசேட அறிக்கையாளர், டொமோயோ ஒபக்கட்டா தலைமையில் இந்த விசாரணை »11



## 111,000 போதை மாத்திரைகள் மன்னாரில் நேற்று மீட்பு

மன்னார், ஏப். 14
மன்னார் - சிலாவத்துறைப் பகுதியில் ஒரு லட்சத்து 11 ஆயிரம் போதை மாத்திரைகள் நேற்று மீட்கப்பட்டுள்ளன. இராணுவப் புலனாய்வுப் பிரிவினருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தப் போதை மாத்திரைகள் மீட்கப்பட்டுள்ளன. »11

## இலங்கையின் கடன்களை ஒருங்கிணைக்க புதியதளம்

ஜப்பானின் நிதியமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, ஏப். 14
இலங்கையின் கடன் விவகாரங்கள் குறித்து ஒருங்கிணைப்பதற்கான புதிய தளமொன்றை ஆரம்பிக்கத் தீர்மானிக்கப்பட்டுள்ளது என்று ஜப்பானின் நிதி அமைச்சர் சுனிச்சி சுசிக்கி தெரிவித்துள்ளார்.
ஜி-7 நாடுகளின் தலைமைப் பதவியை ஏற்றுள்ள ஜப்பான் இலங்கை போன்ற நடுத்தர »11

யாழ்.போதனா மருத்துவமனையில்

## குருதிக்கு தட்டுப்பாடு

விரிவு:- பக்.06

## இலங்கைக்கு ஆதரவு!

ஆசிய அபிவிருத்தி வங்கி அறிவிப்பு

கொழும்பு, ஏப். 14
பொருளாதார நெருக்கடியைச் சமாளிக்க இலங்கைக்குத் தொடர்ந்து ஆதரவளிக்கப்படும் என்று ஆசிய அபிவிருத்தி வங்கி தெரிவித்துள்ளது.
சர்வதேச ஊடகமொன்றுக்கு வழங்கிய செவ்வியில், ஆசிய அபிவிருத்தி வங்கியின் இயக்குநர்களில் ஒருவரான சென் சென் இவ்வாறு தெரிவித்தார்.
பொருளாதார நெருக்கடி நிலையில் இருந்து மீள்வதற்கு இலங்கைக்கு முடியுமான ஆதரவுகளை வழங்குவதற்கு »11

நீதிமன்றில் பிணையெடுக்க

## போலியான ஆவணங்களை தயாரித்தவர் மாட்டினார்!

யாழ்ப்பாணம், ஏப்.14
நீதிமன்றத்தில் பிணையெடுப்பதற்காக, கிராம அலுவலரின் உறுதிப்படுத்தலை போலியாகத் தயாரித்த குற்றச்சாட்டில் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.
கடந்த மாதம் நடைபெற்ற கச்சதீவு திருவிழாவில் நகைகளைத் திருடிய குற்றச்சாட்டில் தென்னிலங்கையைச் சேர்ந்த ஒருவர் கைது செய்யப்பட்டிருந்தார். அவர் மீது ஊர்காவற்றுறை நீதிமன்றில் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது. நீதிமன்றில் முற்படுத்தப்பட்ட சந்தேகநபருக்குப் பிணையில் செல்ல மன்று அனுமதித்தது.
சந்தேகநபருக்கான பிணை ஆவணங்களுக்காக கிராம அலுவலர் உறுதிப்படுத்தல் கடிதம் போலியாகத் தயாரிக்கப்பட்டுள்ளது. போலியான இறப்பர் முத்திரை தயாரிக்கப்பட்டு இந்த உறுதிப்படுத்தல் »11

கனடாவுக்கு அனுப்புவதாக

## மோசடியில் ஈடுபட்ட இளம்பெண் கைது!

யாழ்ப்பாணம், ஏப்.14
கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறிப் பல இலட்சம் ரூபா மோசடி செய்த குற்றச்சாட்டில் 23 வயது இளம் பெண் ஒருவர் யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவால் கைது செய்யப்பட்டுள்ளார். »11

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்துக்கு எதிராக நீதிமன்றத்தை நாடலாம்!

## நீதி அமைச்சர் கூறுகின்றார்



**கொழும்பு, ஏப். 14**
**புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டத்துக்கு எதிராக யார் வேண்டுமானாலும் உயர் நீதிமன்றத்தில் மனுத் தாக்கல் செய்யலாம் அல்லது மேற்கொள்ள வேண்டிய திருத்தங்களைச் சமர்ப்பிக்கலாம் என்று நீதியமைச்சர் விஜயதாஸ ராஜபக்ச தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
புதிய பயங்கரவாத எதிர்ப்புச் சட்டத்தை நான் மட்டும் தனியாகத் தயாரிக்கவில்லை. பாதுகாப்பு அமைச்சு, சட்ட வரைஞர் திணைக்களம், பொலிஸ் திணைக்களம், இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் என்பன இணைந்துதான் இந்தப் புதிய பயங்கரவாத எதிர்ப்புச்சட்டம் தயாரிக்கப்பட்டது.
நாங்கள் விமர்சனங்களை வரவேற்கிறோம். விமர்சனம் செய்பவர்கள் யாராக இருந்தாலும் ஊடக மாநாடுகளை நடத்துவதைவிட்டு விட்டு உயர்நீதிமன்றத்தில் மனுவைத் தாக்கல் செய்யுங்கள்.
ஜனநாயகத்தைப் பாதுகாக்கும் வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த முக்கியமான சட்டமான 21 ஆவது திருத்தத்துக்கே எதிர்ப்புத் தெரிவித்தவர்கள், ஜனநாயகத்தைப்பற்றிப் பேசுவது வேடிக்கையாக உள்ளது - என்றார். (எ-14,6)

# 'உதயன்' மீதான அச்சுறுத்தல் மனித மாண்புக்கு ஒவ்வாதது!

## தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கண்டனம்

யாழ்ப்பாணம், ஏப். 14
எந்த சமயமானவராக இருந்தாலும், ஊடகங்களுக்கு அச்சுறுத்தல் விடுக்கும் வகையில் செயற்படுவது தவறான செயலாகும். இவ்வாறு 'உதயன்' பத்திரிகைக்கு எதிரான அச்சுறுத்தலுக்கு கண்டனம் தெரிவித்து அறிக்கை வெளியிட்டார் தென்னிந்திய திருச்சபையின் பேராயர் கலாநிதி வேலுப்பிள்ளை பத்மதயாளன்.
அவர் அனுப்பிய கண்டன அறிக்கையில் மேலும் உள்ளதாவது:-
அண்மையில் இடம்பெற்ற 'உதயன்' மீதான வன்முறைச் சம்பவங்கள் மனதுக்கு வேதனையானவை. மனித மாண்புக்கு அது துன்பத்தை ஏற்படுத்துகின்றது. எந்த சமய நம்பிக்கை உள்ளவர்களாக இருந்தாலும் ஊடகத்துக்குப் பாதகம் ஏற்படாத வண்ணம் செயற்படவேண்டும். ஊடக சுதந்திரம் என்பது பேணப்பட வேண்டும். நாட்டின் இந்த பொருளாதார நெருக்கடிகள், அரசியல் நெருக்கடிகளின் மத்தியில் இவ்வாறான சமய பிணக்குகளில் சமயவாதங்களோ, மதவாதங்களோ ஏற்படாத வண்ணம் அனைத்து சமய மக்களும் பொறுப்புணர்வுடன் பணியாற்றவேண்டும், வாழ வேண்டும் என்பதே என்னுடைய ஆணித்தரமான கருத்தாகும். ஆகவே இந்த நிலைமைகள் தோற்றம் பெறுவதற்கு சம்பந்தப் பட்டவர்கள் மன்னிப்புக் கேட்கவேண்டும். ஊடகத்துக்குப் பாதிப்பு ஏற்படாத வண்ணம் அனைவரும் செயற்படவேண்டும் என்று அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன் - என்றுள்ளது. (ம-14,125)

# வருடப் பிறப்பு சிறப்பு பூசைகள்

யாழ்ப்பாணம், ஏப். 14
கோப்பாய் வடக்கு இலுப்பையடி வீரகத்தி விநாயகர் ஆலயத்தில் 'சோபகிருது' வருடப் பிறப்பு சிறப்பு பூசைகள் இன்று வெள்ளிக்கிழமை நண்பகல் 12 மணிக்கு ஆரம்பமாகி நடைபெறவுள்ளன. தொடர்ந்து 2 மணிக்கு வருடப் பிறப்பு பூசை, கைவிசேடம் வழங்கல், அர்ச்சனை என்பன இடம்பெறவுள்ளன.
அதேவேளை காலை 6 மணிக்கு மருத்து நீர் வழங்கல் இடம்பெறும் என்று ஆலய பரிபாலனசபை அறிவித்துள்ளது. (ச-17)

# இரு வீடுகளில் திருட்டு

யாழ்ப்பாணம், ஏப். 14
கல்வியங்காடு வேளாதோப்பு பகுதியிலுள்ள இரண்டு வீடுகளில் நேற்று வியாழக்கிழமை திருட்டு இடம்பெற்றுள்ளது.
அதிகாலை 2 மணியளவில் உள்நுழைந்த இரண்டு இனந்தெரியாத நபர்கள் தோடு உள்ளிட்ட பெறுமதிமிக்க பொருள்களைத் திருடிச்சென்றுள்ளனர்.
திருடர்கள் நடமாட்டம் இருப்பதை அறிந்துகொண்ட அயலவர்கள், தேடுதல் நடவடிக்கை மேற்கொண்டபோது சந்தேகநபர்கள் பொருள்களுடன் வீதியால் செல்வதை அவதானித்து துரத்திச் சென்றனர். எனினும் திருடர்கள் திருடிய சில பொருள்களை வேளாதோப்பு வீதியிலும் புதிய செம்மணி வீதியில் அமைந்துள்ள வீடொன்றிலும் கைவிட்டுத் தப்பிச்சென்றுள்ளனர். திருடர்கள் கைவிட்டுச் சென்ற பொருள்களை அயலவர்கள் மீட்டு பொலிஸாரிடம் ஒப்படைத்தனர்.
திருட்டுச் சம்பவம் தொடர்பாக இரு வீட்டு உரிமையாளர்களும் கோப்பாய் குற்றத்தடுப்பு பொலிஸாரிடம் முறைப்பாட்டை பதிவு செய்திருந்தனர்.
முறைப்பாட்டின் அடிப்படையில் விசாரணைகளை மேற்கொண்ட குற்றத்தடுப்புப் பொலிஸார், அயலவர்களால் மீட்கப்பட்ட சில பொருள்களை இரு வீட்டு உரிமையாளரிடமும் கையளித்தனர். மீட்கப்படாத பெறுமதியான பொருள்கள் தொடர்பிலும் சந்தேகநபர்களைக் கைது செய்யவும் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர். (எ-14)



# கட்டுப்பாட்டை இழந்த 'ஹன்ரர்'

யாழ்ப்பாணம், ஏப். 14
வேகக்கட்டுப்பாட்டையிழந்த ஹன்ரர் வாகனம் இரண்டு கடைகளை மோதித் தள்ளி விபத்துக்குள்ளாகியது.
இந்த விபத்துச் சம்பவம் ஆவரங்கால் பகுதியில் நேற்று வியாழக்கிழமை அதிகாலை இடம்பெற்றுள்ளது.
யாழ்ப்பாணத்திலிருந்து பருத்தித்துறை நோக்கி இறைச்சிக் கோழிகளை ஏற்றியவாறு கன்டர் வாகனம் பயணித்துக்கொண்டிருந்தவேளை, வாகனத்தின் முன்பக்க ரயர் திடீரென காற்றுப்போனதால் கட்டுப்பாட்டையிழந்து அருகே உள்ள ரயர்க் கடை மற்றும் தேங்காய் விற்பனை செய்யும் கடை ஆகியவற்றை மோதித்தள்ளியது.
விபத்தில் வாகனத்தில் பயணம் செய்த சாரதியின் உதவியாளர்கள் இருவர், கைகள் மற்றும் தலைகளில் காயங்கள் ஏற்பட்ட நிலையில் அச்சுவேலி பிரதேச மருத்துவமனையில் சேர்க்கப்பட்டனர். கடைக்குள் புகுந்த ஹன்ரர் வாகனத்தை உழவியந்திரம் ஒன்றின் உதவியுடன் பிரதேசவாசிகள் மீட்டனர்.
விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை அச்சுவேலி பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (எ-14,23)

# எடை குறைந்த குழந்தைகள் எண்ணிக்கை அதிகரிப்பு

கொழும்பு, ஏப்.14
இலங்கையில் ஐந்து வயதுக் குட்பட்ட எடை குறைந்தஒரு இலட்சத்து 36 ஆயிரத்து 265 குழந்தைகள் உள்ளன என்று தெரிவிக்கப்படுகின்றது.
குடும்ப சுகாதார சேவைகள் பணியகத்தின் அறிக்கைகளின்படி, இந்த ஆண்டு ஜனவரி மாதத்துக்குள் இந்த சதவீதம் 15.5 சதவீதமாக உள்ளது.
ஐந்து வயதுக்குட்பட்ட எடை குறைந்த குழந்தைகள் நாட்டின் ஒவ்வொரு மாவட்டத்திலும் உள்ளனர். இருநூற்றி இருபத்திரெண்டு குழந்தைகள் கொழும்பு மாவட்டத்தில் பதிவாகியுள்ளனர்.
கொழும்பு மாநகரசபைக்குள் மட்டும் இந்த வயதுக் குட்பட்ட எடை குறைந்த குழந்தைகள் ஆயிரத்து 460 பேர் உள்ளனர் என்று தரவுகள் தெரிவிக்கின்றன.
வயது தொடர்பான எடை இழப்பு, குறைந்த எடை என்றும், குட்டை மற்றும்மெலிந்த குழந்தைகள் எடை குறைவான குழந்தைகள் என்றும் அடையாளம் காணப்படுகிறார்கள்.
குடும்ப சுகாதார சேவைகள் அலுவலகத்தின் தரவு அறிக்கைகளின்படி, நகர்ப்புறம், கிராமம் மற்றும் தோட்டங்கள் என அனைத்துத் துறைகளிலிருந்தும் எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது.
உணவுப் பொருள்களின் விலையேற்றம் காரணமாகக் குடும்பங்களில் ஊட்டச் சத்துக் குறைபாடுகள் உருவாகி வருவதால் எடை குறைந்த குழந்தைகளின் எண்ணிக்கை அதிகரித்து வருகிறது என்று கூறப்படுகின்றது. (எ-இ)

# ஆண்டு விழா

யாழ்ப்பாணம், ஏப். 14
அராலி மத்தி ஸ்ரீ முருகன் சனசமூக நிலையத்தின் 83ஆவது ஆண்டு விழா நிலைய முன்றிலில் இன்று வெள்ளிக்கிழமை மாலை 5.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.
நிலையத் தலைவர் ச.யசிகரன் தலைமையில் நடைபெறவுள்ள நிகழ்வில் பிரதம விருந்தினராக யாழ். பிராந்திய உள்ளூராட்சி உதவி ஆணையாளர் பொ.ஸ்ரீவர்ணன் கலந்து கொள்ளவுள்ளார். (எ-இ)

# குருதிக்கொடை

யாழ்ப்பாணம், ஏப். 14
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு பொற்பதி இந்து விளையாட்டுக் கழகம் 19 ஆவது ஆண்டாக நடத்தும் மாபெரும் குருதிக்கொடை முகாம், இன்று வெள்ளிக்கிழமை காலை 9.30 மணிமுதல் நண்பகல் 12 மணிவரை கொக்குவில் பொற்பதி அறிவாலய மண்டபத்தில் இடம் பெறவுள்ளது. (எ-14,66)

✦✦✦✦✦✦

யாழ்ப்பாணம், ஏப். 14
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு ஏழாலை சகோதர இளைஞர்கள் அமைப்பினரின் ஏற்பாட்டில் குருதிக்கொடை முகாம், நாளை சனிக்கிழமை காலை 8 மணி முதல் ஏழாலைச் சந்தியில் அமைந்துள்ள ஏழாலை வடக்கு கிழக்கு சனசமூக நிலைய மண்டபத்தில் நடைபெறவுள்ளது. (எ-14,66)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தமிழர்களின் எதிர்பார்ப்புக்கள் புத்தாண்டில் நிறைவேறட்டும்!

## ஈ.சரவணபவன் புத்தாண்டு வாழ்த்து



யாழ்ப்பாணம், ஏப்.14
உதயமாகும் சித்திரைப் புத்தாண்டு தமிழ் மக்களின் எதிர்பார்ப்புக்களை நிறைவேற்றும் ஆண்டாக இருக்கட்டும். இந்த ஆண்டில் தமிழ் மக்கள் எதிர்கொள்ளும் அனைத்து இடர்களும் நீங்கவேண்டும் என்று பிரார்த்திப்போம்.
இவ்வாறு தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினரும், உதயன் பத்திரிகை நிறுவனத்தின் நிர்வாக இயக்குநருமான ஈ.சரவணபவன் தெரிவித்தார்.
சித்திரைப் புத்தாண்டை முன்னிட்டு விடுத்துள்ள வாழ்த்துச் செய்தியிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.
அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:
பிறக்கும் சித்திரைப் புத்தாண்டு தமிழ் மக்களின் நீண்டகால எதிர்பார்ப்புக்கள் நிறைவேறும் ஆண்டாக இருக்க வேண்டும் என்று எல்லாம் வல்ல இறைவனை வேண்டுகின்றேன்.
இந்தப் புத்தாண்டில் தமிழ் மக்களுக்கான தீர்வு கிட்டும் என்று எதிர்பார்ப்போம். அதை நோக்கி அனைவரும் ஒன்றிணைந்து பயணிப்போம் உழைப்போம். அதற்கான வாய்ப்புக்களை பிறக்கும் புத்தாண்டு வழங்கும் என்று நம்புகின்றேன்.
கொரோனா பெருந்தொற்று, பொருளாதார நெருக்கடி என்று இடர்களை எதிர்கொண்டிருக்கும் மக்களுக்கு புதிய புத்தாண்டு அனைத்து சௌபாக்கியங்களையும் வழங்கவேண்டும் என்று இறைவனை வேண்டுகின்றேன். அனைவருக்கும் இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்களையும் தெரிவித்துக் கொள்கின்றேன்- என்றுள்ளது. (எ)

# இருள் சூழ்ந்த காலம் நீங்கட்டும் வளமான புத்தாண்டு மலரட்டும்

## எதிர்க்கட்சித் தலைவர் சஜித் வாழ்த்து



கொழும்பு, ஏப். 14
இலங்கை மக்கள் பல சவால்களுக்கு முகம் கொடுத்து மகிழ்ச்சியாகவும் நிம்மதியாக வும் கொண்டாடும் வாய்ப்பு பல ஆண்டுகளாக போய்விட்டது. இந்தப் புத்தாண்டில் இருள் சூழ்ந்த காலம் நீங்கி வளமான மற்றும் ஒளிமயமான எதிர்க்காலத்துக்கான உறுதியுடன் அணிதிரள்வோம்.
இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ தெரிவித்துள் ளார்.
அவர் அனுப்பியுள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:
புத்தாண்டை குடும்பத்து டன் மகிழ்ச்சியாகவும், நிம்மதி யாகவும் கொண்டாடும் வாய்ப்பு கூட பல ஆண்டுகளாக இல்லாமல் போய்விட்டது. ஒட்டுமொத்த மக்களின் ஒரே எதிர்பார்ப்பு நாடு மற்றும் மக்கள் செழிப்புடனும் ஆரோக்கியத்துடனும் வாழ்வதாகும். இந்த இருள் சூழ்ந்த காலம் நீங்கி உண்மையான அர்த்தத்தில் வளமான மற்றும் ஒளிமயமான எதிர் காலத்துக்காக உறுதியுடன் அணிதிரள்வோம். புத்தாண்டை வரவேற்போம்- என்றார். (ச)

# புதிய வருடத்தில் சுபீட்சம் வரட்டும்

## இந்துக் குருமார் அமைப்பு புதுவருட வாழ்த்து

யாழ்ப்பாணம், ஏப். 14
சோபகிருது எனும் மங்கலநாமத்துடன் புதிய வருடம் உதயமாகிறது. இந்தப் புதிய ஆண்டில் எமது மக்களினது அனைத்து இடர்களும் நீங்கி சுபீட்சம் உருவாகட்டும்.
இவ்வாறு இந்துக் குருமார் அமைப்பின் தலைவர் கலாநிதி. சிவஸ்ரீ. கு.வை. க. வைத்தீஸ்வரக் குருக்கள் தெரிவித்தார். அவர் மேலும் குறிப்பிட்டதாவது:



சோபகிருது எனும் மங்கலநாமத்துடன் புதிய வருடம் உதயமாகின்றது. அனைவர் வாழ்விலும் வளமும் நலமும் பலமும் பெற்று சுபீட்சம் நிலைக்கவேண்டும். எமது மக்களினது அனைத்து இடர்களையும் நீக்கி தனித்துவம், வழி பாட்டுச் சுதந்திரம், கருத்துச்சுதந்திரம், பண்பாட்டு விழுமியங்களைக் கட்டியெழுப்புவோம். மலர்ந்துள்ள புத்தாண்டை புதிய உத்வேகத்துடன் வரவேற்போம்- என்றார். (ச)


31 ஆம் நாள் நினைவஞ்சலியும் திரை நீக்கமும்



முன்னாள் தமிழர் விடுதலைக் கூட்டணியின்
யாழ். மாவட்ட செயலாளர் நாயகமும்
அனைத்துலக எம்.ஜி.ஆர் பேரவைத் தலைவரும்
சமாதான நீதவானும் திருமுருகன் களஞ்சிய உரிமையாளரும்
முன்னாள் வடபிராந்திய மினிபஸ் சங்கத் தலைவருமாகிய
அமரர் உயர்திரு.
பொன்னுத்துரை மதிமுகராஜா
அவர்களின் பாசமிகு மனைவி
அமரர் திருமதி
பொன்.மதிமுகராஜா
விஜயலட்சுமி

அவர்களின் நினைவாக இன்று (14.04.2023) வெள்ளிக்கிழமை கடற்றொழில்
அமைச்சர் மற்றும் யாழ். மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுத் தலைவர்
கௌரவ, K.N.டக்ளஸ் தேவானந்தா
மற்றும்
தமிழர் விடுதலைக் கூட்டணியின் செயலாளர் நாயகம்
வீ.ஆனந்தசங்கரி
ஆகியோரால் அன்னாரின் நினைவாக தாவடி வடபத்திரகாளி ஆலய முன்றலில்
அமைந்துள்ள தாவடி தெற்கு சனசமூக நிலைய நுழைவாயில் திரைநீக்கம் செய்யப்படும்.

"ஸ்ரீமுருகபவனம்"
தாவடி வடக்கு,
கொக்குவில்.

தகவல்:
பொன் மதிமுகராஜா
விஜயகாந்த்
077 620 2077
காலி வீதி, வெள்ளவத்தை, கொழும்பு - 06
077 775 0312

தோற்றம் 15.12.1948
மறைவு 15.03.2023

(cs 24450) (N - 1)


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இடையூறுகள் அற்றுப்போகும் புதுவருடமாக அமையட்டும்

## ஆறு.திருமுருகன் வாழ்த்து

யாழ்ப்பாணம், ஏப். 14

எங்களைச் சூழ்ந்துள்ள இடையூறுகள் அற்றுப்போக அனைத்து தமிழ்த் தலைவர்களும் ஒன்றுசேர்ந்து ஒற்றுமையாகச் செயற்பட்டு புதுவருடத்தை வரவேற்போம். இந்தப் புதிய ஆண்டு எம்மண்ணில் சோகங்களைத் தீர்க்கும் வருடமாக அமையட்டும் -இவ்வாறு தனது புத்தாண்டு வாழ்த்துச் செய்தியில் கலாநிதி ஆறு.திருமுருகன் தெரிவித்துள்ளார்.

அவர் அனுப்பிவைத்துள்ள வாழ்த்துச் செய்தியில் மேலும் உள்ளதாவது:-

புதுவருடம் பிறக்கின்றபோது எம் உள்ளத்தில் புதிய சிந்தனைகளைத் தோற்றுவித்து அவை வெற்றிபெறுவதற்கு வழிசெய்வோம். எங்கள் ஆதிச் சமயமாகிய சைவ சமயத்துக்கு வரும் இடையூறுகளைக் கண்டு அச்சப்படாதீர்கள். எங்கள் சமயம் என்றும் நிரந்தரமாக நிலைபெற்றுச் சிறக்கும் என்பதில் உறுதிகொள்வோம். எங்களைச் சூழ்ந்துள்ள இடையூறுகள் அற்றுப்போக அனைத்து தமிழ்த் தலைவர்களும் ஒன்று சேர்ந்து ஒற்றுமையை வளர்ப்போம்.

கோபங்களை மறந்து அன்பைப் பெருக்கி அனைவரையும் ஆற்றுப்படுத்துவோம். எங்கள் குழந்தைகள் இயல்பாகவே எமது பண்பாட்டைக் கற்றுக் கொள்வதற்கு வழி சமைப்போம். பிறக்கின்ற சோபகிருது புதுவருடம் எம் மண்ணில் இடையூறுகளை அகற்றி சோகங்களைத் தீர்க்கும் ஆண்டாக அமையட்டும்- என்றார். (ச)


**அறைகள் வாடகைக்குண்டு**

நல்லூரிற்கு அருகாமையில் அறைகள் வாடகைக்குண்டு. பெண்களுக்கு மட்டும்.

**075 151 1506**

**வீடு வாடகைக்கு**

வெளிநாடுகளில் இருந்து திருமண மற்றும் ஏனைய விழாக்களுக்காக வருபவர்களுக்காக சகல வசதிகளும் கொண்ட வீடு யாழ்நகரில் கிழமை மற்றும் மாத வாடகைக்குண்டு.

**074 374 3767**

**NATHISHA CATERING**

Vege, None Vege & Sea Food Buriyany, Fried Rice, Noodles, Rice & Curry, Pittu, String Hoppers Kottu or With Curry Iddlee, Dosa (Pepper Dosa Masala Dosa, Nei Dosa, Normal Dosa) Nasi & Kottu, Masala Rotti

Up to Ten Person — Door Delivery
Order before 5 Hrs — Within 10 km

T.P : 077 609 0406 — Suthumalai North, Manipay

**தேவை**

யாழ். நகரில் இயங்கும் புத்தக விற்பனை நிலையத்திற்கு வேலையாட்கள் தேவை

- விற்பனைப்பிரதிநிதி (ஆண்/பெண்)
- உதவியாளர் (ஆண்/பெண்)

ஹாட்வெயார் விற்பனை நிலையத்திற்கு

- விற்பனைப்பிரதிநிதி (ஆண்)

**077 494 9683, 077 077 6469**


# மரண அறிவித்தல்

தோற்றம் 09 . 01 . 1934 — மறைவு 12 . 04 . 2023



## சின்னையா சிவகுருநாதன்

இராஜ வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலியைப் பிறப்பிடமாகவும், வதிவிடமாகவும் கொண்ட சின்னையா சிவகுருநாதன் கடந்த (12.04.2023) புதன்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான சின்னையா நாகம்மா தம்பதியரின் சிரேஸ்ட புத்திரனும், காலஞ்சென்றவர்களான சபாரத்தினம் நல்லமுத்து தம்பதியரின் அன்பு மருமகனும், காலஞ்சென்ற இலட்சுமியின் அருமைக் கணவரும், தயாறஞ்சினி (சுகாதார முகாமைத்துவ உதவியாளர், போதனா வைத்தியசாலை, யாழ்ப்பாணம்), சிவகுமாரன் (ஜேர்மனி), சிவரூபன் (அமரர்), பத்மறஞ்சினி ஆகியோரின் பாசமிகு தந்தையாரும், விக்கினேஸ்வரி (ஜேர்மனி), நந்தராஜன் (அலுவலகப் பணியாளர், மாவட்ட செயலகம், யாழ்ப்பாணம்) ஆகியோரின் அருமை மாமனாரும், பவிதா, சஜிதா, அகிசன் ஆகியோரின் செல்லப் பேரனும், விஜயலட்சுமி, சுந்தரலிங்கம், பூபதி, சிவபாக்கியம், செல்வரட்ணம் ஆகியோரின் பட்சமுள்ள சகோதரனும், பாலசிங்கம், பரிமளகமலேஸ்வரி, சுப்பிரமணியம், பத்மநாதன், ஜெகதீஸ்வரி, பூபதியம்மா, கந்தசாமி (அமரர்), தவராசா (அமரர்), விஜயரட்ணம், புஸ்பராணி ஆகியோரின் மைத்துனரும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் 16.04.2023 ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 மணியுளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக மு.ப. 10.00 மணியளவில் சீயாக்காடு இந்து மயானத்திற்கு எடுத்துச்செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

இராஜ வீதி, நீர்வேலி வடக்கு, நீர்வேலி.

தொடர்பு: +9477 9517 613, +9476 8017 780, +9477 4707 119

தகவல்: குடும்பத்தினர்.

# OBITUARY NOTICE



## MRS. RATNAVATHY ANTON

**(Her love, laughter and generosity will be dearly missed)**

It's with profound sadness and grief that we inform of the passing away of Mrs. Ratnavathy Anton on Monday, 10 April 2023.

Beloved wife of Late Emmanuel Benjamin Anton and

Beloved mother of Philip Jeyakumar, Bavani Suresh, Wijayakumar, Mohanakumar, Marina Vathani and Chandrakumar Francis and

Beloved mother-in-law of Annata, Late Mr. Suresh, Suganthi, Nimalini and Ravidrakumar and

Beloved grandmother of Prathusha, Praveen, Kannesha, Thishone, Jesuran, Amanda, Emalda, Benjo, and Jason and

Beloved great-grandmother of Abiran, Aishan, Aavani, Ishaac and Jonah.

A Funeral service in memory of Anton Amma will be held on Sunday, 16 April 2023, at 10.30am (SLT) at her residence, College Lane, Vaddukoddai and Interment will follow in the family plot at the JDCSI Cathedral Cemetery, Vaddukoddai.

College Lane, Vaddukoddai. — Message By Family

(cs.24458) (N-1)

# மரண அறிவித்தல்

தோற்றம் 15 . 03 . 1951 — மறைவு 13 . 04 . 2023



## சிங்கராஜா யசோதராதேவி (யசோ)

இல.122, கண்டி வீதி, கச்சேரியடி, யாழ்ப்பாணத்தை பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிங்கராஜா யசோதராதேவி (யசோ) அவர்கள் நேற்று (13.04.2023) வியாழக்கிழமை இறைவனடி எய்தினார்.

அன்னார் கந்தையா அன்னம்மா தம்பதியரின் அன்பு மகளும், சுப்பிரமணியம் இராசம்மா தம்பதியரின் பாசமிகு மருமகளும், காலஞ்சென்ற சிங்கராஜாவின் (துரை) அன்பு மனைவியும், மயூரன் (மாவட்ட நீதவான் நீதிமன்றம் - கிளிநொச்சி), மயூரதி (அபிவிருத்தி உத்தியோகத்தர், கச்சேரி), மாதுளன் (LOLC கிளை பிராந்திய முகாமையாளர் - நெல்லியடி) ஆகியோரின் அன்புத் தாயாரும், கேதீஸ்வரன் (தொழில்நுட்ப உத்தியோகத்தர்- பூகி இன்ஜினியரிங்), சஞ்சீவா, அனுஷா (முன்பள்ளி ஆசிரியர்) ஆகியோரின் அன்பு மாமியாரும், அவினாஷ், விஸ்மிகன், சுபீட்சா, புகழினி ஆகியோரின் பாசமிகு பேர்த்தியாரும், குணமணி, காலஞ்சென்றவர்களான சோதிமதி, ரட்னேஸ்வரி, சற்குணேஸ்வரி மற்றும் தனலட்சுமி, ருக்குமணி, பாலசுப்பிரமணியம், சேகர் (லண்டன்), மஞ்சு (கனடா) ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்றவர்களான சிற்றம்பலம், காத்தலிங்கம், நடராசா, ம்காலிங்கம், மரியராசா மற்றும் ஞானேஸ்வரி, மனோன்மணி, மோகனசிங்கம் ஆகியோரின் அன்பு மைத்துனியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் இன்று (14.04.2023) வெள்ளிக்கிழமை மு.ப 11.00 மணியளவில் அவரது இல்லத்தில் நடைபெற்று, பூதவுடல் தகனக்கிரியைக்காக அரியாலை சித்துபாத்தி இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இந்த அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள், அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

மயூரன் - 077 6272 196
மாதுளன் - 077 721 6928

தகவல்: குடும்பத்தினர்

(CS 24467) A-1

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

உண்மை - நேர்மை - அஞ்சாமை

உதயன்

மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்



## குரங்குகளை வைத்து கடன் அடைத்தல்

இலங்கையில் காணப்படும் குரங்குகளை சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கு அரசாங்கம் தீர்மானித்திருக்கின்றது. முதற்கட்டமாக இலங்கையில் இருந்து ஒரு இலட்சம் குரங்குகள் சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான நட வடிக்கைகளை அதிகாரிகள் ஆரம்பித்திருக்கின்றனர். அதற்காக அரசாங்கத்தால் குழு ஒன்றும் அமைக்கப்பட்டிருக்கின்றது. சீனாவிலுள்ள உயிரியல் பூங்காங்களுக்கு இந்தக் குரங்குகள் கொண்டு செல்லப்படுகின்றன என்று கூறப்படுகின்றபோதும், அது எந்தளவு உண்மையானது என்பது தெரியவில்லை. இலங்கை அரசாங்கமும் அதைத் தெளிவுபடுத்தவில்லை. அதேபோன்று சீனாவுக்கு அனுப்பப்படவுள்ள குரங்குகள் எவ்வாறு தெரிவுசெய்யப்படவுள்ளன என்பது தொடர்பாகவும் எதுவும் குறிப்பிடப்படவில்லை. விலங்கு ஆர்வலர்களிடம் இருந்து அரசாங்கத்தின் இந்த நடவடிக்கைக்கு கடும் எதிர்ப்பு வெளியாகியிருக்கின்றது.

இலங்கையில் விவசாய அழிவு என்பதைத் தாண்டி குரங்குகளால் பாரதூரமான இடையூறுகள் எவையும் இல்லை. யானை போன்றவற்றால் ஏற்படும் விவசாய அழிவுகளுடன் ஒப்பிடுகையில் குரங்குகளால் ஏற்படும் விவசாய அழிவுகள் குறைவானதே. அதுவும் நாட்டின் குறிப்பிட்ட சில பிரதேசங்களில் மட்டுமே குரங்குகள் விவசாயிகளுக்கு இடையூறாக இருக்கின்றன. அவற்றைக் கட்டுப்படுத்தும் வழிவகைகளை ஆராயாது, பல இலட்சம் குரங்குகளை வேறு நாடுகளுக்கு ஏற்றுமதி செய்வது ஏற்புடையதல்ல என்ற விலங்கு ஆர்வலர்களின் வாதமும் ஏற்றுக்கொள்ளக்கூடியதே.

இலங்கையில் மட்டும் சில குரங்கு இனங்கள் காணப்படும் நிலையில் அவற்றை ஏற்றுமதி செய்வது தொடர்பில் பல கோணங்களில் சிந்திக்கவேண்டும் என்று கூறியிருக்கின்றார் சூழல் விவகாரங்களுக்கான சட்டத்தரணி கலாநிதி ஜகத் குணவர்த்தன. குரங்குகளை ஏற்றுமதி செய்வது என்பது சாதாரண விடயம் அல்ல என்று குறிப்பிட்டுள்ள அவர், ஏற்றுமதி செய்யப்படும் குரங்குகள் என்ன தேவைக்காகப் பயன்படுத்தப்படப் போகின்றன என்பது மிக முக்கியமானது என்றும் சுட்டிக்காட்டியிருக்கின்றார்.


சீனாவில் திடீரென பெருந்தொகைக் குரங்குகளுக்கான தேவை ஏன் எழுந்தது என்பது பற்றியும் இங்கு ஆராயப்படவேண்டியது. உயிரியல் பூங்காக்களுக்கு என்று கூறப்பட்டாலும் அதற்கான தெளிவுபடுத்தல் எவையும் வழங்கப்படவில்லை. கடந்த காலங்களில் சர்வதேச ஊடகங்களில் வெளியாகிய சீனாவின் ஆய்வுகள் தொடர்பான தகவல்கள் இலங்கையில் இருந்து கொண்டு செல்லப்படும் குரங்குகள் மருத்துவ ஆராய்ச்சிக்குப் பயன்படுத்தப்படலாம் என்ற சந்தேகத்தையே ஏற்படுத்துகின்றது. சில வேளை சீனர்களின் உணவுக்காகவும் இலங்கைக் குரங்குகள் பயன்படுத்தப்படக்கூடும்.

இலங்கையைவிடவும் அதிக எண்ணிக்கையில் குரங்குகளைக் கொண்ட பல நாடுகள் இருக்கின்றன. இல்லையேல் விஞ்ஞான தொழில்நுட்பத்தை வைத்து சீனாவே குரங்குகளை வகைதொகையின்றி உற்பத்தி செய்யவும் முடியும். அவ்வாறான தெரிவுகளை விடுத்து சீனா இலங்கையிடம் மட்டுமே இந்தக் கோரிக்கையை முன்வைத்திருப்பதும் கவனிக்கப்படவேண்டியது. சரியான காரணம் இன்றி ஏனைய நாடுகள் குரங்கு ஏற்றுமதிக்கு ஒப்புக்கொள்ள மாட்டா என்பதால், சீனா தனது கடன்பொறிக்குள் சிக்கியுள்ள இலங்கையிடம் இருந்தக் கோரிக்கையை முன்வைத்திருக்கலாம். மேற்குறித்தவற்றில் எது உண்மையென்பதை இலங்கையின் குரங்குகள் சீனாவுக்குக் கொண்டு செல்லப்படும் காரணம் என்னவென்பதை தெளிவாக்க வேண்டும். அங்கு அவை எதற்குப் பயன்படுத்தப்படப் போகின்றன என்பதற்கான உறுதிமொழிகள் அரசாங்கத்தால் வழங்கப்படவேண்டும். நாட்டின் கடனுக்காக காரண, காரியம் அறியாது குரங்குகளை ஏற்றுமதி செய்வது என்பதை ஏற்றுக்கொள்ளமுடியாது. உண்மையில் பயிரழிவுகளைக் கருத்திற்கொண்டு இந்த முடிவு எடுக்கப்பட்டால், பயிரழிவுக்கான விஞ்ஞான ரீதியிலான முயற்சிகளை முதலில் நடைமுறைப்படுத்த அரசாங்கம் முயற்சிக்க வேண்டும். அதன்பின்னரே அரசாங்கம் ஏற்றுமதி தொடர்பில் ஆராயவேண்டும். வாய்பேசமுடியாத விலங்[illegible] வைத்து நாட்டின் கடனை அடைக்க நினைக்[illegible]ரணில்?

### நாளொரு நல்வார்த்தை

“நீ எத்தனை புயல்களைச் சந்தித்தாய் என்பது பற்றி உலகத்துக்கு கவலை இல்லை. பத்திரமாகக் கப்பலை கரை சேர்த்தாயா என்பதுதான் முக்கியம்”

– சுவாமி விவேகானந்தர்




# இலங்கைக் கடன் சுமையை சர்வதேசம் பகிரவேண்டும்

*சீன வெளிவிவகார பேச்சாளர் தெரிவிப்பு*

**கொழும்பு, ஏப்.14**

**இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் நியாயமான சுமை என்ற அடிப்படையில் வர்த்தக மற்றும் சர்வதேச கடன் கொடுப்பனவாளர்கள் தங்களை இணைத்துக்கொள்ள வேண்டும்.**

இவ்வாறு சீனாவின் வெளிவிவகார அமைச்சின் பேச்சாளர் வாங்வென்பின் தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:-

இலங்கை தற்போதைய நெருக்கடியிலிருந்து மீள்வதற்கு கடன் விவகாரத்துக்கு தீர்வை காண்பதற்கு சீனா தொடர்ந்தும் ஆதரவை வழங்கும்.

இலங்கைக்கு கடன் வழங்கிய அனைவரும் அதன் கடன் சுமையைப் பகிர்ந்துகொள்ள வேண்டும். இலங்கையின் கடன்மறுசீரமைப்பு நடவடிக்கைகளில் நியாயமான சுமை என்ற அடிப்படையில் வர்த்தக மற்றும் பன்னாட்டு கடன்கொடுப்பனவாளர்கள் தங்களை இணைத்துக்கொள்ளவேண்டும் - என்றார். (ச-இ)

## எரிபொருள் விற்பனை 7 நாள்களில் உயர்வு!

*எரிசக்தி அமைச்சர் தகவல்*

கொழும்பு, ஏப். 14

கடந்த 7 நாள்களில் எரிபொருள் விற்பனை குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைக் காட்டுகிறது என மின்சக்தி மற்றும் எரிசக்தி அமைச்சர் காஞ்சன விஜயசேகர தெரிவித்துள்ளார். தனது ருவிற்றர் பக்கத்தில் பதிவிட்டுள்ள பதிவொன்றிலேயே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார்.

எரிபொருள் அனுமதிப்பத்திர கியூ.ஆர். அமைப்பு மற்றும் சாதாரண எரிபொருள் விற்பனையில் இந்த முன்னேற்றம் காணப்பட்டுள்ளது.

கடந்தவாரம் 60 வீதத்துக்கும் குறைவாக இருந்த விற்பனை தற்போது 80 வீதத்துக்கும் மேல் அதிகரித்துள்ளது.

இதேவேளை பண்டிகைக் காலங்களில் அதிகரித்து வரும் தேவைக்கு ஏற்ப எரிபொருள் ஒதுக்கீடு அதிகரிக்கப்பட்டுள்ளது என அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)

## துருக்கிக்கு அன்பளிப்பு

கொழும்பு, ஏப்.14

துருக்கியில் அண்மையில் ஏற்பட்ட நிலஅதிர்வில் பாதிக்கப்பட்டவர்களுக்கு இலங்கை 4.6 தொன் ஆடைகளை உதவியாக வழங்கியுள்ளது.

வெளிவிவகார அமைச்சர் அலி சப்ரியால் இலங்கைக்கான துருக்கி தூதுவரிடம் நேற்றுமுன்தினம் இந்த ஆடைகள் கையளிக்கப்பட்டுள்ளன.

இரு நாடுகளுக்குமிடையிலான உறவுகளை எடுத்துரைத்த அமைச்சர் அலி சப்ரி, துருக்கி மக்களுடன் இலங்கை அரசாங்கமும் மக்களும் கொண்டுள்ள ஒற்றுமையை வெளிப்படுத்தியுள்ளார்.

இலங்கையின் சில தனியார் ஆடைத் தொழிற்சாலைகள் இந்த உதவிக்கு தங்களது பங்களிப்பை வழங்கியுள்ளன.

கடந்த பெப்ரவரி மாதம் துருக்கியில் நிலஅதிர்வு ஏற்பட்டதை அடுத்து இலங்கை ஒரு தொகை தேயிலையையும் முன்னர் அனுப்பியிருந்தது. (எ-இ)

### நாளை

15.04.2023
சனிக்கிழமை
சித்திரை 02

சுபநேரம் : 03.04 - 04.34
ராகுகாலம் : 09.04 - 10.34

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யாழ்.போதனா மருத்துவமனையில் குருதிக்குத் தட்டுப்பாடு



**யாழ்ப்பாணம், ஏப். 14**

**யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கியில் தற்போது அனைத்து வகைக் குருதிகளுக்கும் தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது என்று மருத்துவ மனையின் குருதி வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர்.**

குருதி வங்கியில் குருதிச் சேகரிப்பை விட, குருதி வழங்கல் தற்போது கூடுதலாகக் காணப்படுகின்றது. அதனால், நோயாளர்களுக்குத் தேவையான குருதியை வழங்குவதில் சிக்கல் ஏற்பட்டுள்ளது. அதனால் சித்திரைப் புத்தாண்டு காலப்பகுதியில் குருதிக்கான தட்டுப்பாடு மேலும் அதிகரிக்கும் என எச்சரிக்கை விடுத்துள்ளனர்.

குருதிக் கொடையாளர்கள் மற்றும் குருதிக்கொடை வழங்க ஆர்வமுள்ளவர்கள் குருதி வழங்க முன்வர வேண்டும் என்றும், வழங்க விரும்புவோர் 0772105375 எனும் அலைபேசி இலக்கத்துடன் தொடர்புகொள்ள முடியும் எனவும் யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனை குருதி வங்கிப் பிரிவினர் தெரிவித்துள்ளனர். (எ-14-66)

## சந்திரசேகரப் பிள்ளையார் தேர் இன்று

யாழ்ப்பாணம், ஏப். 14

நல்லூர் வடக்கு சந்திரசேகரப் பிள்ளையார் ஆலயத்தின் தேர்த்திருவிழா சித்திரை வருடப்பிறப்பு தினமான இன்று வெள்ளிக்கிழமை காலை 8 மணிக்கு நடைபெறவுள்ளது.

ஆலயத்தின் பெருந்திருவிழா கடந்த முதலாம் திகதி கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெற்று வருகின்றது.

இன்று தேர்த்திருவிழாவும் நளை சனிக்கிழமை காலை 8 மணிக்கு தீர்த்தத் திருவிழாவும், மாலை 6 மணிக்கு கொடியிறக்கமும் நடைபெறவுள்ளது என்று ஆலய நிர்வாகத்தினர் அறிவித்துள்ளனர். (எ-14)




யாழ்ப்பாணம், பிரதேசசெயலகம் நடத்திய இப்தார் நிகழ்வு கடந்த செவ்வாய்க்கிழமை யாழ்ப்பாண பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் இடம்பெற்றது. அதில் யாழ்ப்பாணப் பிரதேசசெயலாளர் சாம்பசிவம் சுதர்சனுக்கு தமிழ் மொழி பெயர்ப்புடன் புனித குர்ஆனை கலாபூஷணம் பரீட் இக்பால் வழங்கினார். (ச)

## இசை ஆராதனை

யாழ்ப்பாணம், ஏப். 14

நல்லூர் வடக்கு, சட்டநாதர் வீதி, கொன்றையடி திருவருள்மிகு வைரவப்பெருமான் தேவஸ்தான வருடாந்தத் தேர் உற்சவத்தை முன்னிட்டு ஸ்ரீஸ்கந்தபதி கலாமன்றம் வழங்கும் இசை ஆராதனை நிகழ்வுகள் எதிர்வரும் 20ஆம் திகதி வியாழக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறவுள்ளது.

ஸ்ரீஸ்கந்தபதி கலாமன்ற மாணவர்களின் இசையாரதனையைத் தொடர்ந்து நுண்கலைமாணி கவிதா.வாமதேவசர்மாவின் நெறியாள்கையில் குழு வீணை இசையும் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் கலந்துகொள்ளும் அனைத்து மாணவர்களுக்கும் பாராட்டுப் பரிசில்கள் வழங்கப்படவுள்ளன.

நிகழ்வுக்கான அனுசரணையை கனடாவைச் சேர்ந்த சிவஸ்ரீ. பால.திருகுணானந்தக்குருக்கள் வழங்கவுள்ளார். (எ-14)

## போதிய பயிற்சி இல்லாததால் தொழிலாளர்களுக்குப் பாதிப்பு

சாவகச்சேரி ஏப்.14

வடமாகாணத்தில் புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள தொழில்சார் நிலையங்களில் பணியாற்றுவோருக்கு போதிய பயிற்சி வழங்கப்படுவதில்லை.

இதனால் பல பணியாளர்கள் கைவிரல்கள் மற்றும் கண்பார்வை போன்றவற்றை இழந்து வருகின்றனர் என்று மருத்துவமனைகளில் சிகிச்சை பெறுபவர்களின் புள்ளி விவரங்கள் தெரிவிக்கின்றன.

வடக்கு மாகாணத்தின் அனைத்து மாவட்டங்களிலும் தும்பு ஆலைகள், மின்வாயு ஒட்டு நிலையங்கள், மர அரிவு ஆலைகள் போன்ற தொழில்சார் நிலையங்கள் இயங்குகின்றன. தும்பு ஆலை மற்றும் மர அரிவு ஆலை போன்றவற்றில் போதிய பயிற்சி பெறாத தொழிலாளர்கள் இயந்திரத்தினுள் கைவிரல்கள் அகப்பட்டு விரல்களை இழந்தும், மின்வாயு ஒட்டு நிலையங்களில் கண் பாதுகாப்பு கருவி பயன்படுத்தாமல் பணியாற்றுவதால் கண்பார்வை இழந்த நிலையிலும் மருத்துவமனைகளில் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இதேவேளை கட்டுமானப் பணிகளில் ஈடுபடும் பலர் இயந்திரங்கள் மூலம் பணிபுரிகின்றனர். இயந்திரங்களில் பணியாற்றும் பயிற்சி பெறாத பணியாளர்கள் இயந்திரங்களால் வெட்டப்பட்டு காயங்களுக்கு உள்ளாகி வருகின்றனர்.

இவ்வாறான அபாயகரமான தொழில்சார் நிலையங்களை நடத்துவோர் தமது பிரிவு உள்ளூராட்சிசபைக்கு விண்ணப்பித்து பிரிவு பொதுச் சுகாதாரப் பரிசோதகரால் பரிசீலனை செய்யப்பட்டு அனுமதி வழங்கப்படல் வேண்டுமென்பது விதிமுறை. இந்த நிலையங்களுக்கு பிரதேச சுகாதார மருத்துவ அதிகாரி மற்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர் ஆகியோர் சென்று அங்கு பணியாற்றும் தொழிலாளர்களைக் கண்காணித்து அவர்களது நலனில் அக்கறை செலுத்தவேண்டும் என்று சுட்டிக்காட்டப்படுகின்றது.

புதிதாக ஆரம்பிக்கப்பட்டுள்ள பல தொழில்சார் நிலையங்கள் உள்ளூராட்சி சபையில் அல்லது சுகாதார மருத்துவ அதிகாரி பணியகத்தில் பதிவு செய்த பின்னரே தொழில்களைத் தொடங்க வேண்டும். ஆனால் வடமாகாணத்தில் கண்டிப்பான நடவடிக்கைகள் இல்லாத காரணத்தால் தொழில்சார் நிலையங்கள் ஆரம்பிக்கப்பட்டு இவ்வாறான பாதிப்புகளும் தொழிலாளர்களுக்கு ஏற்பட்டு வருகின்றன.

பயிற்சி பெறாத தொழிலாளர்களை பணிக்கு அமர்த்திப் பாதிப்புக்குள்ளாக்கும் தொழில்சார் நிலையங்களுக்கு பொலிஸார் மற்றும் சுகாதாரப் பகுதியினர் நடவடிக்கை மேற்கொள்ளவேண்டும் என வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது. (எ-14-9)

## பல்கலை மாணவர்களுக்கு ஊக்குவிப்பு நிதி

கிளிநொச்சி, ஏப்.14

கிளிநொச்சி மாவட்ட கல்வி அபிவிருத்தி நிதியத்தால் குறைந்த வருமானம் பெறும் குடும்பங்களைச் சேர்ந்த பல்கலைக்கழகங்களுக்குத் தெரிவாகிய மாணவர்களுக்கு, கிளிநொச்சி மாவட்டச் செயலக திறன் அபிவிருத்தி நிலைய பயிற்சி நிலையத்தில் ஊக்குவிப்பு நிதி நேற்று வியாழக்கிழமை வழங்கப்பட்டது.

இதற்கான நிதியை பிரதானமாக கிளிநொச்சி இரணைமடுக்குளத்தின் கீழ் நெற்செய்கை மேற்கொள்ளும் விவசாயிகள், கமக்காரர் அமைப்புக்கள் மூலம் வழங்கி வருகின்றனர்.

நிகழ்வில் நிதியத்தின் தலைவரும் மாவட்டச்செயலருமான றூபவதி கேதீஸ்வரன் கலந்துகொண்டு 78 மாணவர்களுக்கு 15 ஆயிரம் ரூபா வீதம் ஊக்குவிப்புத் தொகையை வழங்கினார். (எ-14-113)

## 'நூறு மலர்கள் மலரட்டும்' புத்தக அரங்க விழா நாளை

தேசிய கலை இலக்கியப் பேரவையின் 50ஆவது ஆண்டையொட்டி "நூறு மலர்கள் மலரட்டும்" என்ற தொனிப்பொருளில் தொடர்ச்சியாக மாதாந்தம் நடத்தப்பட்டு வரும் புத்தக அரங்க விழாவின் பத்தாவது நிகழ்வு கரவெட்டி தேவரையாளி இந்துக் கல்லூரியில் நாளை சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மறுநாள் ஞாயிற்றுக்கிழமை மாலை 5 மணி வரை இரு தினங்கள் இடம்பெறவுள்ளன.

சனிக்கிழமை காலை 9 மணி தொடக்கம் மாபெரும் புத்தகக் கண்காட்சியும் மலிவு விற்பனையும் இடம்பெறவுள்ளதுடன் மாலை 4 மணியளவில் "ஈழத்து நூல்களை அறிவோம்" என்ற தலைப்பில் நூல்களின் அறிமுகம் மற்றும் கலந்துரையாடல் நிகழ்வானது எழுத்தாளர் ராஜஸ்ரீகாந்தன் நினைவு அரங்கில் அதிபரும், சமூகச் செயற்பாட்டாளருமான ச.செல்வானந்தன் அவர்களின் தலைமையில் இடம்பெறவுள்ளது.

நூல்களின் அறிமுகவுரைகளை ஆசிரியரும் ஆய்வாளருமான கலாநிதி சு.குணேஸ்வரன், யாழ். பல்கலைக்கழக சமூகவியல் துறையின் முன்னாள் தலைவரும் சிரேஷ்ட விரிவுரையாளருமான இ.இராஜேஸ்கண்ணன், ஆசிரியரும் ஆய்வாளருமான சி.ரமேஸ், யாழ். பல்கலைக்கழக சிரேஷ்ட விரிவுரையாளர் தி. செல்வ மனோகரன், ஆய்வாளர் சி.விமலன் ஆகியோர் ஆற்றவுள்ளனர். (எ-14)

## வடக்கில் அதிபர்களை நியமிக்கக் கோரிக்கை

யாழ்ப்பாணம், ஏப். 14

வடமாகாணத்தில் உள்ள சில பாடசாலைகளில் அதிபர் பதவிகள் வெற்றிடமாகக் காணப்படுகின்றன. இதனால் பதில் அதிபர்களே பாடசாலை நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றனர் எனத் தெரிவிக்கப்பட்டது.

60 வயதைப் பூர்த்தி செய்த அதிபர்கள், ஆசிரியர்கள் கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் 31ஆம் திகதியுடனும் மேலும் சிலர் அதன் பின்னரும் சேவையிலிருந்து ஓய்வு பெற்றனர்.

அவர்களின் இடங்களை நிரப்புவதற்கு விண்ணப்பங்கள் வலயம் மற்றும் கல்வித் திணைக்களத்தால் கோரப்பட்டு நேர்முகத்தேர்வும் நடத்தப்பட்டது.

உள்ளூராட்சித் தேர்தலுக்கான திகதி அறிவிக்கப்பட்டதையடுத்து நியமனம் வழங்குவது பிற்போடப்பட்டது.

எனினும் தற்போது தேர்தல் பிற்போடப்பட்ட நிலையில் நியமனம் வழங்குவதும் நிறுத்தப்பட்டுள்ளது.

தேர்தல் நடைபெறும் திகதி இழுபறி நிலையில் உள்ளதால் அதிபர் பதவி நியமனம் தாமதமடையும். தேர்தலின் பின்னரே நியமனம் வழங்கப்படும் என்று வலயக்கல்வி அலுவலகங்கள் தெரிவித்துள்ளன.

இந்தநிலையில் அதிபர் வெற்றிடமாகவுள்ள பாடசாலைகளுக்கு அதிபர்களை நியமிக்க விரைவாக நடவடிக்கை எடுக்கவேண்டும் என்று கோரிக்கை விடுக்கப்பட்டுள்ளது. (எ-14-9)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

அனைவருக்கும் இனிய சித்திரைப் புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்

# சசிகா லேணர்ஸ்

Happy Tamil New Year

# THE SASIKA LEARNERS

அரச அங்கீகாரம் பெற்ற சாரதி பயிற்சிப் பாடசாலை

Reg.No: DS882

உரிமையாளரின் தொடர்புக்கு 0777 226 247 / 077 614 0361

email: sasikadrivingschool@gmail.com web: sasikalearners.com



தலைமைக்காரியாலயம்
இல.57, வேம்படி வீதி, யாழ்ப்பாணம்.

021 221 7578 / 7678

070 301 3011

கிளைக் காரியாலயங்கள்:

| | | | |
|---|---|---|---|
| மல்லாகம் T.P: 021 224 3393, 070 301 3014, 077 343 6622 | பண்டத்தரிப்பு T.P: 021 225 2333, 071 255 4135, 077 434 3798 | சங்கானை T.P: 021 225 1664, 070 301 3016, 077 434 3149 | சாவகச்சேரி T.P: 021 227 0616, 071 577 0616, 077 435 3995 |
| யாழ் மத்தி (Town) T.P: 021 222 8004, 070 301 5004, 070 301 3017, 077 998 6247 | நெல்லியடி T.P: 021 226 0999, 071 775 0999, 077 261 2446 | புன்னாலைக்கட்டுவன் T.P: 021 224 5001, 076 384 0684 | காரைநகர் T.P: 021 225 2454, 070 510 2484 |

வேலணை : T.P: 021 221 5472, 070 301 3012, 077 3689 319



அனைவருக்கும் சித்திரைப்புத்தாண்டு வாழ்த்துக்கள்



# பூரணி நகை மாடம்

தங்கப்பவுன் நகை வியாபாரம்

பாரம்பரிய கலைநயத்துடன் தங்க ஆபரணங்களை ஓடர் செய்து பெற்றுக் கொள்ளுங்கள்

46, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
Tel: 021 222 3121



அனைவருக்கும் இனிய சித்திரை புத்தாண்டு வாழ்த்துக்கள்

# சிறி மீனாட்சி நகை அகம்

# Sree Meenakchi

*Nagai Aham*



இல.183, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 6109



வாடிக்கையாளர் அனைவருக்கும் சித்திரை புத்தாண்டு வாழ்த்தும் அட்சய திருதியை அழைப்பும்

# சிறிநதியா நகை மாளிகை

5 வருடம் 10 வருடம் அல்ல
42 வருட
கால அனுபவம்
மற்றும் நம்பிக்கை மிக்க
கைராசியான நிறுவனங்கள்



அழகிய தங்க நகைகளின் சாம்ராட்ஜியம்

யாழ் மண்ணில் பிரமாண்ட காட்சியறை சிறிநதியா நகை மாளிகை

அட்ஷய திருதியை தினத்தன்று
**22.04.2023 - 23.04.2023**

எமது வாழ்வின் தேவைகளல் ஒன்றாக விளங்கும் தங்கத்தைத் தற்போதைய பொருளாதார சூழ்நிலைக்கு ஏற்ப உங்கள் பழைய நகையினைக் கொடுத்து அதன் பெறுமதிக்கு ஏற்ப தற்போதைய நவீன வடிவமைப்பில் பெற்றுக்கொள்ளலாம். தங்களின் வசதிக்கேற்ப பெரிய அல்லது சிறிய நகையினை கொள்வனவு செய்து என்றும் வற்றாத செல்வத்துடன் வளமுடன் வாழ தங்களை அன்புடன் அழைக்கின்றோம்.

**அன்றைய தினம் தங்கத்தை கொள்வனவு செய்யும் வாடிக்கையாளர் அனைவருக்கும் பெறுமதிமிக்க பரிசில்கள் வழங்கப்படும்.**

இல.01, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம்.
021 222 2709



# எமது கிளை நிறுவனம்

AKSHAYA TRITIYA

NSR Jewellery

இல.131, கஸ்தூரியார் வீதி, யாழ்ப்பாணம். 021 222 2809


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# தொல்பொருள் திணைக்களத்தின் அதிகாரம் பௌத்த பிக்குகளிடமா?

## சாணக்கியன் எம்.பி. கேள்வி



**திருகோணமலை, ஏப்.14**

**தொல்பொருள் திணைக்களம் தமது அதிகாரங்களை பௌத்த பிக்குகளுக்குக் கொடுத்துள்ளதா? எனக் கேள்வியெழுப்பியுள்ளார் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன்.**

யாழ். மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் எம்.ஏ.சுமந்திரன் மற்றும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் இரா.சாணக்கியன் ஆகியோர் திருகோணமலை, புல்மோட்டைப் பகுதிக்குப் பயணமொன்றை கடந்த திங்கட்கிழமை முன்னெடுத்தனர். அங்கு ஊடகவியலாளர்கள் எழுப்பிய கேள்விகளுக்குப் பதிலளிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

திருகோணமலை, புல்மோட்டையில் பிக்குவின் அட்டகாசங்கள் குறித்து கடந்த சில வாரங்களாக ஊடகங்களில் செய்திகள் வெளியிடப்பட்டு வருகின்றன. அதற்கமைவாக பிரதேச மக்கள் தங்களுக்கு ஆதரவாக அரசியல்வாதிகள் மற்றும் நாடாளுமன்ற உறுப்பினர்கள் இருக்கின்றார்கள் என்ற செய்தியை கூறுவதற்கு நீங்களும்வரவேண்டும்எனக்கோரிக்கை விடுத்ததற்கு இணங்க இன்று (நேற்றுமுன்தினம்) நாம் இங்கு பயணத்தை மேற்கொண்டோம்.

சில நேரங்களில் பிக்குமார்கள் நேரடியாக புல்மோட்டை மக்களிடம் வந்து துப்பாக்கிகளைக் கொண்டு அச்சுறுத்துவது, மிரட்டுவது மற்றும் கற்களைப் போடுவது போன்ற சம்பவங்கள் இடம்பெறுகின்றன. வடக்கு - கிழக்கிலே தமிழ் மக்கள் அதிகளவில் வாழும் அனைத்துப் பிரதேசங்களிலுமே இது போன்ற விடயங்கள் நடந்து கொண்டுதான் இருக்கின்றன. அவற்றுக்கு எதிராக நாங்கள் போராட்டங்களை செய்திருக்கின்றோம். மட்டக்களப்பு மாவட்டத்திலும் கூட ஓர் இடத்தில் இதே பிக்கு இரவு நேரத்தில் இராணுவப் பாதுகாப்புடன் சென்று காணி அபகரிப்பில் ஈடுபட்டார். அப்போது அவரை விரட்டியடித்தோம். இது போன்ற அடாவடி பிக்குகளிடம் இருந்து எங்கள் காணியைக் காப்பாற்ற வேண்டும் - என்றார்.

(எ-14,213)

# கருவாட்டுக் கடைகளில் திடீர் பரிசோதனைகள்

யாழ்ப்பாணம், ஏப்.14

யாழ்ப்பாணம் காங்கேசன்துறை வீதியில் அமைந்துள்ள கருவாட்டுக் கடைகளில், யாழ்.மாநகர சுகாதார மருத்துவ அதிகாரி தலைமையிலான பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் திடீர் பரிசோதனைகள் நேற்றுமுன்தினம் புதன்கிழமை மேற்கொள்ளப்பட்டன.



தெருவோர தூசுக்கள், மாசுக்களால் பாதிப்புறக்கூடிய வகையில் கருவாடுகளை வைத்திருந்த உரிமையாளர்களுக்கும், கருவாடுகளை தூசு படியும் வகையிலும், அழுக்கான, துருப்பிடித்த கம்பிகளில் தொங்கவிட்டிருந்த உரிமையாளர்களுக்கும் எச்சரிக்கைகள் விடுக்கப்பட்டன. அத்துடன் தெருவோரம் கருவாடுகள் வைத்து விற்பனை செய்வதாயின் கண்ணாடிப் பெட்டிக்குள் வைத்து விற்பனை செய்ய வேண்டுமென்ற அறிவுறுத்தல்கள் வழங்கப்பட்டன. கருவாடுகள் அனைத்தையும் பொலித்தீனால் மூடி தூசுகள் படாதவாறு காட்சிப்படுத்தவேண்டும் என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் அறிவுறுத்தப்பட்டது.

கருவாட்டுக் கடைகளிலுள்ள குறைபாடுகள் நிவர்த்தி செய்வதற்கு கடை உரிமையாளர்களுக்கு இரண்டு வாரகால அவகாசம் வழங்கப்பட்டதுடன், கால அவகாசத்தின் பின்னரும் குறைபாடுகள் நிவர்த்தி செய்யாத உரிமையாளர்களுக்கு எதிராகக் கடுமையான சட்டநடவடிக்கை எடுக்கப்படும் என்றும் பொதுச் சுகாதாரப் பரிசோதகர்களால் தெரிவிக்கப்பட்டது.

(எ-14,26)

# மதிப்பளிப்பும் பிரியாவிடையும்

யாழ்ப்பாணம், ஏப்.14

சாவகச்சேரி கல்வயல் ஸ்ரீசண்முகானந்தா வித்தியாலயத்தில் ஐந்தாம் தரப் புலமைப்பரிசில் பரீட்சையில் சித்திபெற்ற மாணவர்கள் மதிப்பளிப்பும் பிரியாவிடை நிகழ்வும் அண்மையில் இடம்பெற்றது. அதிபர் ச.துளசிதாசன் தலைமையில் நடைபெற்ற நிகழ்வில் முதன்மை விருந்தினராக யாழ்.பல்கலைக்கழக கல்வியியல் துறை விரிவுரையாளர் வை.விஜயபாஸ்கர் கலந்துகொண்டார்.

(ச-9)

# சிறப்புச் சொற்பொழிவு

யாழ்ப்பாணம், ஏப்.14

புன்னாலைக்கட்டுவன் திடற்புலம் அருள்மிகு ஸ்ரீ நரசிங்க வைரவர் தேவஸ்தான வருடாந்த அலங்கார உற்சவத்தை முன்னிட்டு ஆலயப் பிரதான மண்டபத்தில் நாளைமறுதினம் சனிக்கிழமை முதல் மே மாதம் 3 ஆம் திகதி புதன்கிழமை வரை தினமும் மாலை 7.30 மணிக்கு சிறப்புச் சொற்பொழிவுகள் இடம்பெறவுள்ளன.

சைவப்புலவர்கள் பொன்.சந்திரவேல், செ.த.குமரன், சி.கா. கமலநாதன், கந்த.சத்தியதாசன், இளம்சைவப்புலவர்கள் நித்தியபாபுதரன், ச.நவநீதன், க.கயிலைவாசன், த.மனோஜ்குமார், க.கைலநாதன் ஆகியோர் சொற்பொழிவுகளை ஆற்றவுள்ளனர். சொற்பொழிவில் இருந்து மாணவர்களிடம் வினாக்கள் தொடுக்கப்பட்டுப் பாராட்டுப் பரிசில்களும் வழங்கப்படவுள்ளன.

(எ-14)

# இலவச கண்புரை சத்திரசிகிச்சை எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பம்

யாழ்ப்பாணம், ஏப்.14

யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் இலவசமாக மேற்கொள்ளப்படவுள்ள கண்புரை சத்திரசிகிச்சை எதிர்வரும் 18 ஆம் திகதி ஆரம்பமாகவுள்ளது என்று யாழ்ப்பாணம் பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி ஆ.கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் அனுப்பி வைத்த அறிக்கையில் தெரிவித்துள்ளதாவது:

யாழ். மாவட்டத்திலுள்ள பின்தங்கிய பிரதேசங்களில் வசிக்கும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்ளவேண்டிய நோயாளிகளுக்கான இலவச கண்புரை சத்திரசிகிச்சைத் திட்டம் யாழ்.போதனா மருத்துவமனையில் சில அமைப்புக்களின் உதவியுடன் முற்றிலும் இலவசமாக நடைமுறைப்படுத்தப்படுகிறது. இந்தத் திட்டத்தின் கீழ் மருதங்கேணி பிரதேசசெயலக பிரிவில் மருதங்கேணி, அடம்பன், முள்ளியான் ஆகிய மருத்துவமனையில் நடத்தப்பட்ட கண்பரிசோதனை முகாம்களில் 141 பேர் கண்புரை சத்திரசிகிச்சைக்காகத் தெரிவு செய்யப்பட்டுள்ளனர்.

இவர்களில் முதல் கட்டமாக 50 பேருக்கு எதிர்வரும் சித்திரை மாதம் 18 ஆம் திகதியும், இரண்டாம் கட்டமாக 50 பேருக்கு சித்திரை மாதம் 25 ஆம் திகதியும், ஏனையவர்களுக்கு மே மாதத்திலும் கண்புரை சத்திரசிகிச்சை மேற்கொள்வதற்கு ஒழுங்குகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்களை மருதங்கேணி பிரதேசசெயலக பிரிவில் இருந்து யாழ்.போதனா மருத்துவமனைக்கு அழைத்து வருவதற்கும் சத்திரசிகிச்சைக்குப் பின்னர் அவர்களை மீள மருதங்கேணிக்கு அழைத்துச் செல்வதற்கும் போக்குவரத்து ஏற்பாடுகள் சுகாதாரத் திணைக்களத்தால் இலவசமாக ஒழுங்கு செய்யப்பட்டுள்ளன.

சித்திரை 18 ஆம் திகதி சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அதற்கு முதல் நாளான சித்திரை 17 ஆம் திகதி காலை 8 மணிக்கும், சித்திரை 25 ஆம் திகதி சத்திரசிகிச்சைக்குத் தெரிவு செய்யப்பட்டவர்கள் அதற்கு முதல் நாளான 24 ஆம் திகதி காலை 8 மணிக்கும் மருதங்கேணி, அம்பன், முள்ளியான் மருத்துவமனைகளுக்குச் சமூகமளிக்க வேண்டும்.

சத்திர சிகிச்சைக்குப் பின்னர் அன்று மாலையிலேயே அவர்கள் யாழ்.போதனா மருத்துவமனையில் இருந்து மருதங்கேணிக்கு அழைத்துச் செல்ல போக்குவரத்து ஏற்பாடுகள் சுகாதாரத் திணைக்களத்தால் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

சத்திரசிகிச்சை மேற்கொள்ளப்படும் திகதி சம்பந்தப்பட்ட நோயாளர்களுக்கு ஏற்கனவே சுகாதாரத் திணைக்களத்தால் அலைபேசி மூலம் அறிவிக்கப்பட்டுள்ளது. சம்பந்தப்பட்ட நோயாளர்களை உரிய நேரத்தில் சமூகமளித்து திட்டத்தை வெற்றிகரமாக நடைமுறைப்படுத்த ஒத்துழைப்பு வழங்க வேண்டும் என்று கேட்டுக்கொள்கின்றோம் - என்றுள்ளது.

(எ-14)

# நிறுவனங்களின் பங்களிப்பாலேயே கிராமங்கள் வளர்ச்சியடைகின்றன

## வலயக் கல்விப் பணிப்பாளர் ரவிச்சந்திரன் தெரிவிப்பு

யாழ்ப்பாணம், ஏப். 14

ஒரு கிராமத்தில் ஆரோக்கியமான சமூகத்தை உருவாக்குவதற்கும் வழிநடத்திச் செல்வதற்கும் சமூக நிறுவனங்களின் பங்களிப்பு மேலானது என்று வலிகாமம் கல்வி வலயத்தின் கல்விப் பணிப்பாளர் பொன்னையா ரவிச்சந்திரன் தெரிவித்தார்.

கடந்த ஞாயிற்றுக்கிழமை இணுவில் பொது நூலக ஆண்டு விழாவில் பிரதம விருந்தினராகக் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது:

ஒரு சமூகத்தில் நடைமுறை சார்ந்த விடயங்களை நடைமுறைச் சாத்தியமான வகையில் மேற்கொள்ளும்போது அந்தச் சமூகம் ஆரோக்கியமான மகிழ்ச்சியான சமூகமாக மாறும். அப்படிப்பட்ட நெறிமுறை சார்ந்த விடயங்களை இணுவில் பொது நூலகம் மற்றும் சனசமூக நிலையம் மேற்கொண்டு வருவது பாராட்டத்தக்க விடயம்.

இங்குள்ள கந்தசாமி கோயில், பரராஜசேகரப் பிள்ளையார் கோயில் இணுவிலின் பெருமைகளைப் பறைசாற்றி நிற்கின்ற நிலையில் இணுவில் பொது நூலகமும் சனசமூகநிலையமும் இந்தச் சமூகத்தின் குறிகாட்டிகளாக விளங்குகின்றன - என்றார்.

(எ-14,20)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## புத்தாண்டு வாழ்த்துக்கள்

ஒற்றுமையாக வாழ்வோம்

பௌத்தமும் இந்து மதமும் வரலாற்று ரீதியாக இணைக்கப்பட்டவை. மறைக்கப்பட்டு இருக்கும் இந்துக்களதும் பௌத்தர்களதும் பெறுமதிமிக்க உறவை வெளிக்கொண்டுவந்து அனைவரும் அறிய வெளிப்படுத்துவோம்.

**பௌத்த இந்து ஒற்றுமை**

ஸ்ரீ நாகவிஹாரா, ஸ்டான்லி வீதி, யாழ்ப்பாணம்.

0776630462


# பஞ்சாப்பை நேற்று வென்றது குஜராத்



பஞ்சாப் கிங்ஸ் அணியை 6 விக்கெட்டுக்கள் வித்தியாசத்தில் வீழ்த்தி வெற்றியைப் பதிவு செய்தது குஜராத் டைட்டன்ஸ் அணி.


நாணயச் சுழற்சியில் வென்று முதலில் களத்தடுப்பைத் தெரிவு செய்தார் குஜராத் அணித்தலைவர் பாண்டியா. துடுப்பெடுத்தாடக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு ஆரம்பமே சறுக்கலாக அமைந்தது. பிரப்சிம்ரன் சிங் ஓட்டமெதையும் பெறாமல் சமியின் பந்தில் ஆட்டமிழந்தார். அவரைத் தொடர்ந்து ஷிகர் தவானும் 8 ஓட்டங்களை மாத்திரம் பெற்று ஆட்டமிழக்க 28 ஓட்டங்களுக்கு ஆரம்பத்துடுப்பாட்ட வீரர்கள் இருவரையும் இழந்தது பஞ்சாப். தொடர்ந்து வந்த மத்தியூ சோட் ஓரளவு அடித்தாடி 24 பந்துகளில் 36 ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தபோதிலும் மத்திய வரிசை வீரர்களின் மந்தமான துடுப்பாட்டத்தால் பஞ்சாப் அணியால் அதிக ஓட்டங்களைப் பெற்றுக்கொள்ள முடியவில்லை. பானுக ராஜபக்ச 26 பந்துகளில் 20 ஓட்டங்களையும், ஜித்தேஷ் சர்மா 23 பந்துகளில் 25 ஓட்டங்களையும், சாம் கரண் 22 பந்துகளில் 22 ஓட்டங்களையும் பெற்றுக்கொடுக்க நிறைவில் பஞ்சாப் அணியால் 8 விக்கெட்டுக்களையிழந்து 153 ஓட்டங்களையே பெற்றுக்கொள்ள முடிந்தது. அந்த அணி சார்பாக சாருக் கான் மாத்திரமே 2 சிக்ஸர்களை அடித்திருந்தார். குஜராத் அணிக்காக தனது முதலாவது ஆட்டத்தில் விளையாடிய மோகித் சர்மா 2 விக்கெட்டுக்களையும் சமி, லிற்றில், அல்சாரி ஜோசப் மற்றும் ரஷித் கான் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் வீழ்த்தினர்.

இலகுவான வெற்றியிலக்கை நோக்கித் துடுப்பெடுத்தாடிய குஜராத் அணிக்கு ரிதிமன் சகா, சுப்மன் கில் ஜோடி சிறப்பாகத் துடுப்பெடுத்தாடி ஓட்டங்களைப் பெற்றுக்கொடுத்தனர். சகா 19 பந்துகளில் 30 ஓட்டங்களைப் பெற்ற நிலையில் ரபாடாவின் பந்தில் ஆட்டமிழந்தார். இதன்மூலம் ஐ.பி.எல்லில் குறைந்த போட்டிகளில் 100 விக்கெட்டுக்களைப் பெற்ற வீரர் என்ற சாதனையைப் படைத்தார் ரபாடா. இதற்கு முன்னர் மலிங்கா 70 போட்டிகளில் 100 விக்கெட்டுக்களைப் பெற்றிருந்தமையே சாதனையாக இருந்தமை குறிப்பிடத்தக்கது. அடுத்து வந்த சாய் சுதர்சன், பாண்டியா பெரிதளவில் ஓட்டங்களைப் பெற்றுக் கொடுக்காத போதிலும் களத்திலிருந்த சுப்மன் கில், மில்லருடன் இணைந்து பதட்டமில்லாத ஆட்டத்தை வெளிப்படுத்தியிருந்தார்.

இறுதி ஓவரில் 7 ஓட்டங்கள் பெற்றால் வெற்றியென்ற நிலை. 49 பந்துகளில் ஒரு சிக்ஸர், 7 பவுண்டரிகள் அடங்கலாக 67 ஓட்டங்களைப் பெற்றுக் கொடுத்திருந்த நிலையில் சாம் கரண் வீசிய இறுதி ஓவரின் இரண்டாவது பந்தில் ஆட்டமிழந்து பவிலியன் திரும்பினார் கில். எனினும் தெவெட்டியா பவுண்டரி விளாசி ஆட்டத்தை வெற்றியுடன் முடித்தார்.

பந்துவீச்சில் அர்ஸ்தீப் சிங், ரபாடா, ப்ரார் மற்றும் சாம் கரண் ஆகியோர் தலா ஒரு விக்கெட்டைக் கைப்பற்றினர். போட்டியின் ஆட்டநாயகனாக பந்துவீச்சில் சிறப்பாகச் செயற்பட்ட மோகித் சர்மா தெரிவானார்.

(ம,ரி1)


அபிவிருத்தி லொத்தர் சபையின்

அனைத்து வாடிக்கையாளர்களுக்கும், விற்பனை முகவர்களுக்கும், இலங்கை வாழ் அனைத்து மக்களுக்கும்

**இனிய – ஆரோக்கியமான**

**புத்தாண்டு வாழ்த்துக்கள் !**

www.dlb.lk



## யா/ நீர்வேலி அத்தியார் இந்துவின்

## மணிவிழா வாழ்த்தும் சேவைநலன் பாராட்டும்

இன்று (14.04.2023) வெள்ளிக்கிழமை ஓய்வுபெறும்
எங்கள் ஆரம்பப்பிரிவுப் பகுதித் தலைவர்

**திருமதி ஸ்ரீரஞ்சினி விசுவாசம் (Spl.Trnd)**

(பழைய மாணவி)

**சேவை விபரம்**

- புத் / வட்டக்கண்டல் அ.மு.வி
  15.04.1985 - 14.02.1988
- யா / கோப்பாய் ஆசிரிய பயிற்சிக் கலாசாலை
  15.02.1988 - 31.12.1989
- புத் / ஸாகிஷா தேசியக் கல்லூரி
  01.01.1990 - 31.12.1993
- யா / அத்தியார் இந்துக் கல்லூரி
  01.01.1994 - 31.12.1994
- கிளி / ஜெயபுரம் அ.த.க. பாடசாலை
  01.01.1995 - 30.08.2002
- யா / அத்தியார் இந்துக் கல்லூரி
  01.09.2002 - 24.04.2006
- கிளி / ஜெயபுரம் ம.வி
  25.04.2006 - 29.04.2009
- வவு / சுந்தபுரம் சரஸ்வதி வித்தி
  30.04.2009 - 01.01.2010
- யா / அத்தியார் இந்துக் கல்லூரி
  04.01.2010 - இன்றுவரை



எழுத்து அறிந்து
ஏழ்மை தொலைந்து
வாழ்வு சிறந்திட
கருத்தறிந்து கல்வி
பணிதனை விசுவாசமாய்
– ஆற்றியே
நல்வழிப்படுத்திய அன்னையின்
– வளர்ச்சிக்கே
பகுதித் தலைவராய் அரும்
– பணியாற்றி
பணிநயப்பு பெறும் எங்கள்
ஸ்ரீரஞ்சினி விசுவாசம் அவர்களே
வாழ்க பல்லாண்டு ! வாழ்க
– பல்லாண்டு !


என வாழ்த்தும்
ஆசிரியர் நட்புறவுக் கழகத்தினர்

தொலைபேசி எண்: 077 870 8335


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# சோபனங்கள் வரமாகும் சோபகிருது தமிழ்ப் புத்தாண்டு



கே.எஸ்.சிவஞானராஜா

"சோபகிருது தன்னில் தொல்லுலகெலாஞ் செழிக்கும் கோபமகன்று குணம்பெருகும் – சோபனங்கள் உண்டா கும், மாரிபொய்க்காமல் பெய்யும் எல்லாம் உண்டாகும் என்றே உரை"

தமிழர்தம் வாழ்வில், அமிழ்தான ஒரு பண்டிகையாக உதயமாகி ஆற்றுப் படுத்த வரும் அர்த்த புஷ்டியான திருநாளே சித்திரைத் தமிழ்ப்புத்தாண்டு ஆகும்.

பன்னெடுங்காலமாக பாரம்பரிய சம்பிரதாயங்களோடு, பஞ்சாங்க விதி முறைகளை அனுசரித்து பத்தியமாகவும் பயபக்தியாகவும் கொண்டாடப்படும் ஆன் மீகப் பான்மையோடு இசைந்த ஆனந்த நாளே சித்திரை வருடப் பிறப்பாகும்.

இலங்கையில், தமிழ்- சிங்கள இரு சமூகத்தவர்களும், பிரமாதமாகக் கொண்டாடி வரவேற்கின்ற பேறானதொரு புதுவருடப் புண்ணிய நாளாக இந்நாள் சிறப்பாகப் போற்றப்படுகிறது. சித்திரைப் புதுவருடப் புத்தாண்டாகிய இந்நாள் அனைவரும் சமம் என்ற ஒற்றுமையின் பொன்னாளாக அனைவராலும் விரும்பப் படுகிறது. அனுசரிப்பும், ஆக்க ஊக்கமும், அன்னியோன்னியமும் எல்லோர் மன திலும் மிளிருமாயின் இலங்கை உலகத் திலே சுவர்க்கபுரியாக மாறும். என்பதில் ஐயமில்லை. ஆன்மீகமும், அரசியலும், அறிவியலும் மொத்தத்தில் அனைவருமே வாழ்த்துகின்ற புதுவருடமாக "சோபகிருது" பிறக்கின்றது.

இம்முறை இந்தப் புதுவருட மானது நீடித்த ஆயுள், ஆரோக்கியம், பாதுகாப்பு, சிறுவர் நலன், பெண்கள் நலன், வறுமை ஒழிப்பு, விவசாய மேம் பாடு, தொழிலாளர் மேம்பாடு, மலையக வாழ்வாதாரம், கடற்றொழில் பாதுகாப்பு, சுயபொருளாதாரம், சேமிப்பு, போஷாக்கு, பெண்தலைமைத்துவக் குடும்பம், போதை ஒழிப்பு, தொழில்வழிகாட்டல், கைதி கள் நலனோம்பு, நீர் மற்றும் மின்சார பாவனை காடு வளர்ப்பு, கால்நடைகள் பாதுகாப்பு வீதி நடைமுறை ஒழுங்கு, விபத் துக்களுக்கான எச்சரிக்கை ஆகியவற் றிலே கூடிய கவனமோடு பிறப்பதற்காய் 'சோபகிருது' வருடத்தை 14.04.2023 வெள்ளிக்கிழமை உளம் பூரித்து வரவேற் கின்றோம்.

கலியுகாதி சுத்த தினம் 1871583, நாடி 19 விநாடி 53 தற்பரை 45 இற்குச் சரியான சோபகிருது வருஷம், சித்திரை மாதம் முத லாம் திகதி (14.04.2023)

வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.03இல், அபரபக்க நவமித்திதியில், திருவோண நட்சத்திரத்தின் இரண்டாம் பாதத்தில், சாத்திய நாம யோகத்தில், கர சக் கிரகணத்தில், கடக லக்கினத்தில், மீன நவாம்சத்தில், சுக்கிரன் காலவோரையில், சாத்விக குணவேளையில் இப்புதிய வரு டம் பிறக்கிறது. அன்று முற்பகல் 10.03 முதல் பிற்பகல் 6.03 வரை விஸு புண் ணிய காலமாகும்.

இப்புண்ணிய காலத்தில், யாவ ரும் விதிப் படி மருத்துநீர் தேய்த்து, சிரசில் கொன்றையிலையும், காலலில் புன்கிலை யும் வைத்து ஸ்நானம் செய்து வெள்ளை நிறமுள்ள பட்டாடையாயினும் அல்லது வெள்ளைக் கரையில் அமைந்த புதியபட் டாடையாயினும் தரித்து, முத்து, வைரம் இழைத்த ஆபரணம் அணிந்து, சுகந்த சந்தனம் பூசி நறுமலர் சூடி, தத்தம் வீடுக ளில் சூரியனுக்குப் பொங்கல் பூஜைகள் செய்து, விக்கினேசுவரர் முதலிய குல தெய்வ வழிபாடு செய்து, இயன்ற தான தர்மங்களியற்றி மாதா., பிதா குரு, தெய்வ மற்றும் மூத் தோர் விவசாய மேதாவிகளைப் போற்றி வணங்கி, அவர்களின் ஆசி பெற்று, உற்றார் நண்பர்க ளுடன் அளவளாவி, அறுசுவை உணவுடன் கடுகு, எள், புளி, நெல் லிக்கனி இவற்றையும் சேர்த்து அருந்தி, தாம்பூலம் தரித்து, மங் கலப் பொருள்களைத் தரிசித்து, மங்கல வாத்திய ஒலிகளையும், திருமுறைப் பாடல்களையும் உள மாரக் கேட்டு, "சோபகிருது" புதுவ ருடப் பிறப்பை தவ மாக வரவேற்போ மாக. ஆம் மருத்து நீரில், தாழம்பூ, தாமரைப்பூ, மாது ளம் பூ, துளசி, விஷ்ணு கிராந்தி, சீதே வியார் செங்கழுநீர், வில்வம், அறுகு, பீர்க்கு, பால், கோசலம், கோமயம், கோரோசனை, மஞ்சள், மிளகு, திற்பலி, சுக்கு ஆகியவற்றைச் சுத்த ஜலத்திலே இட் டுக் காய்ச்சி தலையில் வைத்து ஸ்நானம் செய்தால், சங்கிரம தோஷ நிவாரணத்தை சம்பந்தமுடைய தோஷகாரர்கள் பெற்றுய் வர் என்று பஞ்சாங்கம் கூறும்.

சங்கிரம தோஷ நட்சத்திரங்களாக, ரோகிணி, மிருகசீரிடம் 3ஆம் 4ஆம் கால் கள், திருவாதிரை, புநர்பூசம் 1ஆம் 2ஆம் 3ஆம் கால்கள், திருவோணம், அவிட்டம் 1ஆம் 2ஆம் கால்கள் ஆகிய இவற்றில் பிறந்தோர் தவறாது மருத்துநீர் தேய்த்து, ஸ்நானம் செய்து, இயன்ற தானதர்மங் கள் செய்து சங்கிரம தோஷத்தை நிவர்த்தி செய்து கொள்ளமுடியும்.

கைவிசேஷம் கொடுத்தலா கிய பாரம்பரிய நிகழ்வானது, புதுவருட கொடுக்கல் வாங்குதலை சுப நேரத்தில் ஆரம்பித்தலாகும். புதுவருடம் பிறந்த அடுத்த நாளாகிய சனிக்கிழமை காலை 7.52 முதல் 9.00 மணிவரையுள்ள காலம் கைவிசேஷத்துக்குரிய காலமாகும். வெற்றிலையிலே மஞ்சள் கட்டி, நெல்லு, பாக்கு, பழம், நாணயம், தாள்கள், பூக் கள், திருநீறு, சந்தன வாலாயமோடு காசினைப் பரிமாறுவர். இதன்மூலம் சோபனங்கள் மலிந்தோங்கட்டும்.

மேலும் சுபமுகூர்த்த வேளையில் சகல கருமங்களையும் ஆரம்பித்து, புதுவருட அனுகூலங்களையும், வரமாக்குவர். போர்த்தேங்காய் அடித்தல் என்பது வருட வீர விசித்திர விளையாட்டாகும். சென்ற காலம் எமக்களித்த அனுபவங்கள் மூலமாக நாம் வென்று வாழ இன்றைய புதுவருட வாழ்வை சாதனைகளாக்கு வோம். ஒவ்வொரு சதமும், ஒவ்வொரு சொட்டு நீரும், ஒவ்வொரு சோற்று அன் னமும், ஒவ்வொரு மனிதனும், ஒவ்வொரு குழந்தையும் தவப்பேறு எனக் கருதி சோப கிருது ஆண்டை வரமாக்குவோம்.

## திருக்கணித பஞ்சாங்கம்

14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2. 59 மணிக்கு சோப கிருது வருடம் பிறக்கிறது.

14.04.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.59 மணி முதல் மாலை 6.59 மணி வரை மருத்துநீர் வைக்கும் நேரம்.

**கைவிசேட நேரம்**

15ஆம் திகதி சனிக்கிழமை காலை 6.45 - 7.30 மற்றும் காலை 8.00 - 8.55,

16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 8.00 9.30 மற்றும் நண்பகல் 12.10 பிற்பகல் 1.15

## வாக்கிய பஞ்சாங்கம்

14.04.2023 வெள்ளிக்கிழமை பிற்பகல் 2.03 மணிக்கு சோபகிருது வருடம் பிறக்கிறது.

14.04.2023 வெள்ளிக்கிழமை முற்பகல் 10.03 மணி முதல் மாலை 6.03 மணி வரை மருத்துநீர் வைக்கும் நேரம்.

**கைவிசேட நேரம்**

15ஆம் திகதி சனிக்கிழமை காலை 7.52 - 9.00

16ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை காலை 7.49 - 9.48


# மரண அறிவித்தல்

அன்னை மடியில் 03 . 12 . 1950

ஆண்டவன் அடியில் 10 . 04 . 2023



## நவரத்தினம் கருனாகாந்தன்

அச்சுவேலி தெற்கைப் பிறப்பிடமாகவும் கனடா (Kitchener) ஐ வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் கருணாகாந்தன் அவர்கள் கடந்த (10.04.2023) திங்கட்கிழமை இறைபதம் அடைந்துள்ளார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் சிவஞானவதி தம்பதியரின் சிரேஷ்ட புத்திரரும், சிவகுமாரியின் பாசமிகு கணவரும், காலஞ்சென்றவர்களான தியாகராசா பாக்கியம் தம்பதியரின் அன்பு மருமகனும், சிவகாந்தன் (Pricing Manger Canada) அவர்களின் பாசமிகு தந்தையும், கஜீயின் அன்பு மாமனாரும், மித்திரா, அமரன், றுத்திரன் ஆகியோரின் அன்புப் பேரனும், கனடாவில் வசிக்கும் காந்தமலர், சந்திரமலர், காலஞ்சென்றவர்களான விஜயகாந்தன், சந்திரகாந்தன் மற்றும் சிறீஸ்காந்தன், பவளமலர் (அச்சுவேலி), ரஞ்சிதமலர் (ஓய்வுநிலை ஆசிரியர் திருமலை), சிறீமுருக தாஸ்காந்தன் (ஆசிரிய ஆலோசகர் யாழ். கல்வி வலயம்) ஆகியோரின் உடன்பிறப்பும், காலஞ்சென்ற வர்களான வைகுந்தவாசன், ஸ்ரீஸ்காந்தராசா மற்றும் கனடாவில் வசிக்கும் சாந்தமலர், சந்திரா தேவி, ஜெயா, சிவராசா (அச்சுவேலி), சிவேந்திரராசா (ஆசிரியர் அலஸ்தோட்டம் மாதுமையாள் வித்தியாலயம் திருமலை), சிவாஈஸ்வரி, (ஆசிரியர் யா/கரந்தன் இராமுப்பிள்ளை வித்தியாலயம் நீர்வேலி) ஆகியோரின் அன்பு மைத்துனரும், கனடாவில் வசிக்கும் துசியானி, மயூரன், கிசான், நிலானி, மாதுரி, காலஞ்சென்ற சாரங்கன் மற்றும் துஷித்தா, சாதனா, கர்சனா, கீர்த்தனா, கபிர்த்தனா (மாணவி, ஊவா பல்கலைக்கழகம்), யதுர்சனன் (மாணவன் மொறட்டுவ பல்கலைக்கழகம்), பானுசங்கர் (பொறியியலாளர், கனடா), கௌதமன் (சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ் பல்கலைக் கழகம்), கனடாவில் வசிக்கும் கணேஸ்குமார், தயாளன், திலீப்குமார் (அபிவிருத்தி உத்தியோகத்தர் பிரதேச செயலகம் வேலணை) ஆகியோரின் பெரிய தந்தையும், கனடாவில் வசிக்கும் திசாந்தி, அபிராமி, அபிராம், கஜந்தினி, சரண்யா (பொறியியலாளர்), கபி, திவேத், அருண்யா (துபாலதிபர் யாழ்ப்பாணம்), லக்சலா (முகாமைத்துவ உதவியாளர் யாழ் பல்கலைக்கழகம்), கிருஷ்ணியா, (சிரேஷ்ட விரிவுரையாளர் யாழ் பல்கலைக்கழகம்), செந்தில்ராஜ் (கணக்காளர் கொழும்பு) ஆகியோரின் அன்பு மாமனாரும், 14 பிள்ளைகளின் பூட்டனும் ஆவார்.

அன்னாரின் பூதவுடல் Chapel Rideg Funeral Home இல் ஞாயிறு, திங்கட்கிழமைகளில் பார்வைக்கு வைக்கப்பட்டு இறுதிக்கிரியை எதிர்வரும் (17.04.2023) திங்கட்கிழமை Highland Hills Funeral Home இல் 5 மணிக்கு தகனம் செய்யப்படும். இந்த அறிவித்தலை உற்றார், உறவினர்கள், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்

சகோதரர்கள்
பவளமலர் (0771163712)
ரஞ்சிதமலர் (0771095497)
சிறிமுருகதாஸ்காந்தன் (0777296311)

தகவல்:
குடும்பத்தினர்

(CR 39647) A-1


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# உயர்தர விடைத்தாள்களின் மதிப்பீட்டை ஆரம்பிக்குக!

## ஐ.தே.க. உறுப்பினர் கோரிக்கை

மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு கல்விப் பொதுத் தராதர உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையை ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆரம்பிக்க வேண்டும். வரிக்கொள்கையைப் பயன்படுத்திக் கொண்டு மாணவர்களைப் பழிவாங்கக்கூடாது என்று ஐக்கிய தேசியக் கட்சியின் செயற்குழு உறுப்பினர் சாந்தினி கோங்கஹகே தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்;

அரசாங்கத்தின் புதிய வரிக்கொள்கைக்கு எதிர்ப்புத் தெரிவித்து பல்கலைக்கழக பேராசிரியர்கள் தொழிற்சங்க போராட்டத்தை கடந்த ஒருமாத காலமாக முன்னெடுத்து வருகின்றனர்.

வரிக்கொள்கை என்பது அனைவருக்கும் பொதுவானது. அது பல்கலைக்கழக பேராசிரியர்களுக்கு மாத்திரமானதல்ல. இந்த வரிக்கொள்கையில் அரச துறையில் 5 வீதமானவர்களே உள்வாங்கப்படுகின்றனர். அவ்வாறு இருக்கையில் ஆசிரியர் சங்கத்தினரும், பல்கலைக்கழக பேராசிரியர் சங்கத்தினரும் இதனை முன்னிலைப்படுத்தி போராட்டத்தில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்களின் போராட்டம் காரணமாக உயர்தரப் பரீட்சை விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கை ஆரம்பிக்கப்படாமல் இருக்கிறது. விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் கலந்துகொள்ளும் மதிப்பீட்டாளர்களுக்குத் தேவையான அனைத்து வசதிகள் மற்றும் கொடுப்பனவுகள் அதிகரிக்கப்பட்டிருக்கின்றன.

எனினும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் ஆயிரத்து 400 பேர் வரையானவர்கள் விடைத்தாள் மதிப்பீட்டு நடவடிக்கையில் கலந்துகொள்ளாமல் இருந்து வருகின்றனர். இவர்களின் இந்த நடவடிக்கையால் தற்போது க.பொ.த. சாதாரணதரப் பரீட்சையும் இரண்டு வாரங்களுக்கு பிற்போடப்பட்டிருக்கிறது.

எனவே அரசியலுடன் சம்பந்தமில்லாத மாணவர்களின் எதிர்காலத்தைக் கருத்திற்கொண்டு ஆசிரியர்கள் மற்றும் பல்கலைக்கழக பேராசிரியர்கள் தங்களது கடமையை நிறைவேற்ற முன்வரவேண்டும் எனக் கேட்டுக்கொள்கிறேன் -என்றார். (ம-14.இ)

# விடைத்தாள் மதிப்பீட்டை ஆரம்பிக்க பேராசிரியர்கள் தலையிடவேண்டும்!

## கல்வி அமைச்சு கோரிக்கை

கொழும்பு, ஏப். 14

பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம் தனது தொழிற்சங்க நடவடிக்கையை இடைநிறுத்துவதற்கான முடிவை வரவேற்கும் அதேவேளையில், உயர்தர விடைத்தாள் மதிப்பீட்டை ஆரம்பிப்பதற்கு சம்மேளன உறுப்பினர்கள் தலையிடவேண்டும் என்று கல்வி அமைச்சு கோரிக்கை விடுத்துள்ளது.

இது தொடர்பில் கல்வி அமைச்சு விடுத்துள்ள அறிக்கையில் உள்ளதாவது:-

உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை மதிப்பீடு செய்யும் பணியை ஆரம்பிக்கப் பரீட்சைத் திணைக்களம் தயாராக உள்ளது. இந்த நிலையில் விடைத்தாள் மதிப்பீட்டில் பேராசிரியர்களின் தலையீடு அவசியமானதொன்றாகும். அத்துடன் உறுப்பினர்கள் ஏதேனும் பிரச்சினைகளைப் பற்றி விவாதிக்க விரும்பினால், எந்த நேரத்திலும் அதைச்செய்ய அமைச்சு தயாராக இருக்கின்றது. இதேவேளை - பல்கலைக்கழக ஆசிரியர் சங்க சம்மேளனம், எதிர்வரும் திங்கட்கிழமை முதல் பல்கலைக்கழக விரிவுரைகளை மீண்டும் ஆரம்பிப்பதற்கு எடுக்கப்பட்ட தீர்மானத்தையும் அமைச்சு வரவேற்றுள்ளது - என்றுள்ளது. (ம-14.இ)

### வடமாகாணத்தில்...

வடக்கில் நிலவும் அதீத வெப்பம் காரணமாக அடுத்த மாத நடுப்பகுதியில் வடக்கின் பல பகுதிகளிலும் தண்ணீருக்குப் பஞ்சம் ஏற்படும் என்றும் அறிவுறுத்தியுள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

சூரியனுடைய நிலை 08 பாகை 37 கலை வடக்கு அகலாங்கிலும் 69 பாகை 14 கலை கிழக்கு நெட்டாங்கிலும் அமைவு பெற்றுள்ளது. இதனால் எதிர்வரும் 30ஆம் திகதிவரை வடக்கு மாகாணத்தின் ஆவியாக்கத்தின் அளவு கடந்த வாரத்தை விடவும் 19 வீதத்தால் அதிகரித்துக் காணப்படும்.

கடந்த மாரிகாலப் பருவமழை இயல்பை விட குறைவாக இருந்தமையால் மாகாணத்தின் தரைமேற்பரப்பு மற்றும் தரைக்கீழ் நீரின் அளவு ஏற்கனவே குறைவாகக் காணப்படுகிறது. தற்போதைய வெப்பநிலை உயர்வும் அதன் விளைவான ஆவியாக்கத்தின் அதிகரிப்பும் அவற்றின் அளவு மேலும் குறைவடையும். இதனால் வடக்கு மாகாணத்தின் பல பகுதிகளில் கிணறுகளின் நீர்மட்டம் குறைவடைந்து மே மாதத்தின் நடுப்பகுதியிலேயே மாகாணத்தின் பல பகுதிகளுக்கும் நீர்ப்பற்றாக்குறை ஏற்படக்கூடும். யாழ். மாவட்டத்தின் தீவுப் பகுதிகளுக்கு வழமையாக வருடந்தோறும் ஏற்படுகின்ற நீர்ப் பற்றாக்குறையின் தீவிர நிலைமை முன்கூட்டியே ஏற்படக்கூடிய ஆபத்துக் காணப்படுகிறது. அதிகூடிய வெப்பநிலை காரணமாக இடம்பெறும் மேற்காவுகைச் செயற்பாடு (உகைப்பு) காரணமாக ஆங்காங்கே மதியத்துக்குப் பிறகு அல்லது அதிகாலை வேளைகளில் மிதமான மழை கிடைக்கும் வாய்ப்புள்ளது. ஆனால், மழைகிடைக்கும் இடங்களை எதிர்வுகூற முடியாது.

இந்த வெப்பப்பேரிடரை ஓரளவேனும் எதிர்கொள்வதற்காக,

✦ முற்பகல் 11 மணி தொடக்கம் பிற்பகல் 3 மணிவரை இயலுமான வரை வெளியில் நடமாடுவதைத் தவிர்க்க வேண்டும்.

✦ போதுமான அளவுக்கு நீர் (அது பானங்களாகவோ அல்லது வேறு வடிவங்களிலோ இருக்கலாம்) அருந்துவதை உறுதிப்படுத்தவேண்டும்.

✦ அடுத்த சில வாரங்களுக்கு கிணறுகள் துப்புரவாக்கி இறைத்தல் அல்லது இயலுமான வரை நீரை வீணாக வெளியேற்றல் போன்ற செயற்பாடுகளைத் தவிர்க்க வேண்டும்.

✦ தோட்டங்களுக்கு நீர்பாய்ச்சுதல் செயற்பாட்டை பகல் பொழுதுகளில் மேற்கொள்ளாது மாலை வேளைகளில் மேற்கொள்ளுதல் வேண்டும்.

✦ வீடுகளில் நாளாந்தப் பாவனைக்குப் பயன்படுத்தப்படும் திறந்த கிணறுகளின் மேற்பகுதிகளை சூரிய ஒளி படாதவாறு மூடி வைத்தல் வேண்டும். இது கிணறுகளில் பாசி வளர்வதையும் குறைக்கும்.

✦ நீரைத் தவறாகப் பயன்படுத்துவதையும், தேவைக்கு மேலதிகமாகப் பயன்படுத்துவதையும் தடுத்தல் வேண்டும். தாவரங்களின் கிளைகளையோ, விதானங்களையோ அகற்றுவதை நிறுத்துதல்.

எனவே, அதிக வெப்பநிலையுடன் கூடிய வானிலை நிலைமையை எதிர்கொள்வதற்கு நாம் எம்மைத் தயார்ப்படுத்துவது சிறந்ததாகும் - என்றார்.

(அ-ம-66)

### நிமோனியாவால்...

உடையார்கட்டுப் பகுதியைச் சேர்ந்த நிர்மலன் கபீஸ் (வயது-4) என்பவரே உயிரிழந்தவராவார்.

காய்ச்சல் காரணமாக நேற்றுமுன்தினம் புதுக்குடியிருப்பு ஆதார மருத்துவமனைக்குக் கொண்டுசெல்லப்பட்ட சிறுவன், மேலதிக சிகிச்சைக்காக அங்கிருந்து முல்லைத்தீவு மாவட்ட மருத்துவமனைக்கு மாற்றப்பட்ட நிலையில், சிகிச்சை பயனளிக்காமல் நேற்று அதிகாலை உயிரிழந்தான். (அ-ம-19)

### இலங்கையின்...

வருமான நாடுகளின் கடன் நெருக்கடிக்கு தீர்வைக் காண்பதற்கு முன்னுரிமை அளித்துள்ளது. இந்த நிலையிலேயே இந்த அறிவிப்பை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்ததாவது:-

ஜப்பான், பிரான்ஸ், இந்தியா ஆகிய நாடுகள் இணைந்து இலங்கையின் கடன் விவகாரங்கள் குறித்து ஒருங்கிணைப்பதற்கான புதிய தளமொன்றை ஆரம்பிக்கத் தீர்மானித்துள்ளன. சீனாவும் இதில் இணைந்துகொண்டால் அது சிறந்ததொரு விடயமாகக் காணப்படும் - என்றார். (அ-ம)

### இலங்கைக்கு...

ஆசிய அபிவிருத்தி வங்கி எதிர்பார்த்துள்ளது. எதிர்காலத்தில் சலுகை நிதியை வழங்குவதன் ஊடாக இலங்கைக்கு ஆதரவை வழங்க ஆசிய அபிவிருத்தி வங்கி திட்டமிட்டுள்ளது என்று அவர் மேலும் தெரிவித்தார். (அ-ம)

### பாலியல்...

கள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இலங்கையிலிருந்து பல பெண்கள் ஓமானுக்குப் பாலியல் நோக்கத்துக்காக அல்லது தொழில்ரீதியான துஷ்பிரயோகத்துக்காகக் கடத்தப்பட்டுள்ளனர் என தகவல்கள் கிடைக்கின்றன. ஐக்கிய அரபு இராஜ்ஜியத்தில் தொழில்வாய்ப்பு என்ற போர்வையிலேயே இவர்கள் கொண்டு செல்லப்பட்டுள்ளனர். சில பெண்கள் ஏலத்தில் விடப்பட்டனர். பலர் தனியார் வீடுகளில் வைக்கப்பட்டு துஷ்பிரயோகங்களுக்கு உட்படுத்தப்பட்டனர். போதுமான உணவோ அல்லது உறங்குவதற்கான வசதிகளோ அவர்களுக்கு வழங்கப்படவில்லை - என்று டொமொயோ ஒபக்கட்டா வெளியிட்டுள்ள முதற்கட்ட அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளது. (அ-ம)

### மோசடியில்...

தொலைபேசி ஊடாக அறிமுகமான இந்தப் பெண் கனடாவுக்கு அனுப்புவதாகக் கூறி ஒருவரிடம் கட்டம் கட்டமாக 30 இலட்சம் ரூபாவைப் பெற்றுக்கொண்ட பின்னர் தொடர்புகளைத் துண்டித்துள்ளார். இவர் தனது சொந்த இடம் அச்சுவேலி என்று தெரிவித்திருந்த நிலையில், அங்கும் அவரைக் கண்டறிய முடியவில்லை.

இது தொடர்பில் பொலிஸாரிடம் முறைப்பாடு செய்யப்பட்டிருந்த நிலையில், யாழ்ப்பாணம் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணநிரோஜன் தலைமையிலான பொலிஸ் குழு விசாரணைகளை ஆரம்பித்திருந்தது. சந்தேகநபரின் வங்கிக் கணக்கிலக்கம் மற்றும் தொலைபேசிப் பதிவுகளைக் கொண்டு விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்தனர். பொலிஸாரின் தொடர் விசாரணைகளின் அடிப்படையில் சந்தேகநபர் நேற்று யாழ்ப்பாணத்தில் வைத்துக் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்பட்டுவரும் நிலையில், டுபாயில் உள்ள தொழிலதிபர் ஒருவரின் வழிகாட்டலிலேயே வெளிநாடு அனுப்பும் நடவடிக்கைகளை மேற்கொண்டதாக சந்தேகநபர் தெரிவித்துள்ளார். சந்தேகநபரின் வங்கிக் கணக்கில் ஒரு கோடி ரூபாவுக்கும் அதிகமான கொடுக்கல், வாங்கல்கள் பதிவாகியுள்ள நிலையில் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றனர். (அ-எ-26)

### போலியான...

கடிதம் சமர்ப்பிக்கப்பட்டதுடன், சந்தேகநபர் தொடர்பான போலியான தகவல்களும் வழங்கப்பட்டுள்ளன.

இது தொடர்பில் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொறுப்பதிகாரி குணநிரோஜன் தலைமையிலான பொலிஸ் குழுவினர் விசாரணைகளை முன்னெடுத்திருந்தனர். போலியான ஆவணங்களைத் தயாரித்தவர் தலைமறைவாகியிருந்த நிலையில், நேற்று அவர் மானிப்பாயில் வைத்துப் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்டவர் யாழ்ப்பாணம், திருநகரைச் சேர்ந்த 43 வயதுடையவர் என்றும் அவரிடம் விசாரணைகள் முன்னெடுக்கப்படுகின்றன என்றும் விசேட குற்ற விசாரணைப் பிரிவுப் பொலிஸார் தெரிவித்தனர்.

(அ-எ-26)

### 111,000...

மீட்கப்பட்ட போதை மாத்திரைகளின் பெறுமதி சுமார் 16 மில்லியன் ரூபா என்று கணக்கிடப்பட்டுள்ளது. அவை இந்தியாவிலிருந்து கடல் வழியாகக் கொண்டுவரப்பட்டு மறைத்து வைக்கப்பட்டிருக்கலாம் என்று தெரிவித்துள்ள பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். இந்தச் சுற்றிவளைப்பின்போது சந்தேகநபர்கள் எவரும் கைதுசெய்யப்படவில்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (அ-ம.ச.213)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# அரச அச்சகத்துக்கான நிதியை கிடப்பில் போட்டுள்ள திறைசேரி

கொழும்பு, ஏப். 14

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான அச்சுப்பணியில் ஈடுபட்ட அரச அச்சக ஊழியர்களுக்கான சுமார் 5 கோடி ரூபா கொடுப்பனவு வழங்கப்படவில்லை என அரசாங்க அச்சகம் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அரசாங்க அச்சகர் திருமதி கங்கானி லியனகே தெரிவித்துள்ளதாவது:

உள்ளூராட்சிமன்றத் தேர்தலுக்கான அஞ்சல் மூல வாக்குச் சீட்டுகள் மற்றும் ஏனைய ஆவணங்களை அச்சிடும் பணியில் 200 க்கும் மேற்பட்ட அரச அச்சக ஊழியர்கள் ஈடுபட்டனர். சுமார் 22 மாவட்டங்களின் தபால் மூல வாக்குச் சீட்டுகள் அச்சிடப்பட்டுள்ளன.

இந்த நடவடிக்கைகளுக்காக ஐந்து கோடி ரூபாவுக்கும் அதிகமான பணம் செலவிடப்பட்டுள்ளது. திறைசேரியால் இதுவரை பணம் வழங்கப்படவில்லை. அதனால் பணியில் ஈடுபட்ட அரச அச்சக ஊழியர்களும் கொடுப்பனவுகளின்றி கடும் அவதிக்குள்ளாகியுள்ளனர்.

உள்ளூராட்சிசபைத் தேர்தல் தொடர்பான அச்சுப் பணிகளை முற்றாக நிறுத்துவதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது - என்றார். (ச-இ)

## சிறப்பு வழிபாடு

யாழ்.ஏப். 14

புத்தாண்டை முன்னிட்டு வட்டுக்கோட்டை தெக்கணப்பாய் அருள்மிகு கண்ணகாம்பிகா சமேத கண்ணலிங்கேஸ்வரர், கண்ணகியம்மன் ஆலயங்களில் இன்று வெள்ளிக்கிழமை மதியம் 12.30 மணிக்கு சிறப்பு வழிபாடுகள் நடைபெறவுள்ளன. விசேட பூசைகளுடன் வழிபாடுகள் ஆரம்பமாகி வருடப்பிறப்பு நேரம் 2.03 மணிக்கு விசேட அபிஷேகம் இடம்பெறும் என ஆலய நிர்வாகத்தினர் தெரிவித்துள்ளனர். (ம)

*இலங்கைக் கடன் விவகாரம்*

## ஹமில்டன் வங்கி வழக்கு 20 ஆம் திகதி விசாரணை!

இலங்கைக்கு எதிராக நியூயோர்க்கில் உள்ள பெடரல் நீதிமன்றில் ஹமில்டன் ரிசர்வ் வங்கி தாக்கல் செய்த வழக்கு எதிர்வரும் 20 ஆம் திகதியன்று விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்படவுள்ளது.

சர்வதேச கடன்களை மீளச் செலுத்தாமல் கடன் மறுசீரமைப்பு பேச்சுக்களின்போது உள்ளூர் வங்கிகளின் இறையாண்மைப் பத்திரங்கள் தொடர்பாகக் கவனம் செலுத்த இலங்கை அரசாங்கம் தவறிவிட்டது. கடனைத் திருப்பி செலுத்தாது இருப்பதற்கு திட்டமிடுகிறது.

இலங்கைக்கு வழங்கிய சர்வதேச இறையாண்மை பத்திரங்களின் முழுத் தொகையையும் ஜூலை 25 ஆம் திகதிக்குள் வட்டியுடன் செலுத்தவேண்டும் எனக் கோரி ஹமில்டன் ரிசர்வ் வங்கி கடந்த ஆண்டு வழக்குத் தாக்கல் செய்தது.

இந்த மனுவைத் தள்ளுபடி செய்யவேண்டும் என்று கோரி இலங்கை அரசாங்கம் அண்மையில் மனுத்தாக்கல் செய்தது.

எனினும் அந்த மனு நிராகரிக்கப்பட்டுள்ள நிலையில், எதிர்வரும் 20 ஆம் திகதியன்று வழக்கு விசாரணைக்கு எ[illegible]த்துக்கொள்ள[illegible]படும் என்று[illegible]ம் அதன் [illegible]போது இலங்கை த[illegible]ப்பு தமது வ[illegible] தத்தை முன்[illegible]வக்க வேண்டு[illegible] என்று நியூ[illegible]யோர்க் நீதிமன்று க[illegible]ட்டளையிட்டது. (ச-இ)


**காணியுடன் வீடு விற்பனைக்கு**

திருநெல்வேலி வளாக வீதியில் 3/4 பரப்பு காணி வீட்டுடன் விற்பனைக்கு.

தொடர்பு: 076 739 2518

**வீடு விற்பனைக்கு**

சோமசுந்தரம் அவெனியூவில் 1 3/4 பரப்பு வீடு விற்பனைக்குண்டு

தொடர்பு: 077 732 6792

(CS24464)(J-1)

**காணி விற்பனைக்குண்டு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 39 பரப்புக் காணி விற்பனைக்குண்டு (நிலப்பரப்பு)

- யாழ்ப்பாணம் - பருத்தித்துறை வீதி, புத்தூர்ச்சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான வீதியிலிருந்து (காப்பெற் வீதி) 100 m தூரத்தில்
- 15 அடி பாதையுடன் 2 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்
- குடியிருப்புக்கள் சூழவுள்ள பகுதி
- நன்னீரூற்று நிலம்
- 1 பரப்பின் விலை இரண்டு இலட்சம் ரூபாய் மட்டும் (200.000/=)
- விவசாயம் செய்வதற்கும் வீடு கட்டுவதற்கும் உகந்த இடம்
- பருத்தித்துறை வீதியிலிருந்து 1km தூரம்
- சோமஸ்கந்தா கல்லூரியிலிருந்து 1km தூரம்

பார்வையிடும் நேரம் காலை 06.00 மணியிலிருந்து மாலை 06.00 மணிவரை

தொடர்பு:- 076 733 6047, 076 333 6079 076 733 6093

**INDIVIDUAL ENGLISH CLASSES**

Grammer, Spoken, IELTS Preparations,
IELTS life Skills A1 Preparations
Our Class Provides Proficiency Knowledges in English
Call for Class 077 027 1552

**காணி விற்பனைக்கு**

யாழ்ப்பாணம் கைதடி வழிப்பிள்ளையார் ஆலயத் திற்கு அருகாமையில் 02 பரப்புக் காணி விற்பனைக்கு உண்டு.

- ✓ A-09 வீதியிலிருந்து இரண்டாவது காணி.
- ✓ கைதடி சந்தியிலிருந்து 500M தூரம்
- ✓ A-09 வீதியிலிருந்து 50M தூரத்தில் காணி உள்ளது.

தொடர்பு: 076 4365 814

(CS 24449)J-1

எமது ஆதரவாளர்களிற்கு இனிய தமிழ்ப் புத்தாண்டு வாழ்த்துக்கள்

உங்கள் கட்டடங்கள் மற்றும் புதிதாக கட்டப்படும் கட்டடங்களில் ஏற்படும் நீர்க்கசிவை தடுப்பதற்கு உலக தரம் வாய்ந்த இரசாயனப் பொருட்களைக்கொண்டு 10 வருட உத்தரவாத்துடன் சீர் செய்து தருவோம்

போலிகளை கண்டு ஏமாறாதீர்கள்

North & East Engineering
55, stanly Road, Jaffna, Srilanka.
021 222 2363, 077 524 4177, 077 232 3000
www.northand east engineering.com

(cs 24461) N.1

**காணி விற்பனைக்கு உண்டு**

யாழ்ப்பாணம் புத்தூரில் 36 பரப்புக் காணி விற்பனைக்கு.

நிலப்பரப்பு

புத்தூர் சந்தியிலிருந்து மட்டுவில் செல்லும் பிரதான காப்பற் வீதியிலிருந்து இரண்டாவது காணி.

1 பரப்பின் விலை ஒரு இலட்சத்து இருபத்தி ஐந்து ஆயிரம் ரூபா மட்டும் (125.000/=)

3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில்

பருத்தித்துறை வீதி, புத்தூர் சந்தியிலிருந்து 1 1/2 KM தூரம்.

தொடர்பு: 076 755 8606 077 6385 683

(CS 24428 C)A-1

**இனிய புத்தாண்டு நல்வாழ்த்துக்கள்**

**கொழும்பு விலையில் யாழ்ப்பாணத்தில்**

**30% விலைக்கழிவில்**

பான்சி பொருள்கள், பிளாஸ்ரிக் பொருள்கள், தையல் உபகரணங்கள், பாடசாலை உபகரணங்கள், கவறிங்வகைகள், கிறீம்வகைகள், விளையாட்டுப்பொருள்கள், சில்வர்வகைகள், கிளாஸ்வகைகள், அலுமினியப்பொருள்கள், மாபிள்வகைகள் அனைத்துப் பொருள்களும் மொத்தமாகவும் சில்லறையாகவும் பெற்றுக்கொள்ளலாம்.

உரிமையாளர்: தே.கலைத்தாசன் (கரன்)
சரவணபவன் பான்சிகவுஸ்
26/1, ஜிம்மா பள்ளிவால் வீதி, யாழ்ப்பாணம்.
021 315 5900

(cs24453) (N-1)

**காணி விற்பனைக்கு**




யாழ்ப்பாணம் புத்தூரில் பருத்தித்துறை வீதி. புத்தூர் சந்தியில் இருந்து 1/2 KM தூரம், புத்தூர் சந்தியிலிருந்து சாவகச்சேரி செல்லும் பிரதான காபற் வீதி முகப்புடன்

நிலப்பரப்பு

74 பரப்புக் காணி குடியிருப்புகள் சூழ உள்ள ப்குதி நன்னீர் ஊற்று நிலப்பரப்பு 3, 3 பரப்பாக பிரிக்கப்பட்ட நிலையில் விற்பனைக்கு உண்டு.

தொடர்பு:
077 4683 354
076 9119 371
076 7390 413




(காபற் மெயின் றோட்டுடனே முழுக் காணியும் உள்ளது.)

(CS 24454) A-1




இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 14. 04.2023 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org